பக்கங்கள் 36

காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | மார்கழி 17 வியாழக்கிழமை 01.01.2026 | அதிர்வு 155




# சகலரும் ஒற்றுமையுடன் கைகோர்த்து சிறந்த நாட்டைக் கட்டியெழுப்புவோம்!

## புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி

"நாம் முன்பு இருந்ததை விட சிறந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியும் என்று உறுதியாக நம்புகின்றோம். இதற்கான திட்டத்தில் அசைக்க முடியாத உறுதியுடனும் நம்பிக்கையுடனும் சகோதரத்துவத்துடன் கைகோர்க்க அனைவருக்கும் நான் அழைப்பு விடுகின்றேன்."

– இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க விடுத்துள்ள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-



"மிகப்பெரிய மறுசீரமைப்புச் செயல்முறையையும், மீளக் கட்டியெழுப்பும் பாரிய பணியையும் தோள்மேல் சுமந்த நாடென்ற வகையில் நாம் 2026 ஆம் ஆண்டு புத்தாண்டில் கால்களைப் பதிக்கின்றோம்.

பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும், கடந்த 2025 ஆம் ஆண்டு தேசிய அபிலாஷைகளை அடிப்படையாகக் கொண்ட நிலையான அபிவிருத்திக்காக அடித்தளமிடப்பட்ட ஆண்டாக அமைந்தது.

04 ▶

# மாகாண சபைத் தேர்தலை நடத்தி வாக்குறுதியை நிறைவேற்றுங்கள்



## அநுர அரசிடம் சுரேஷ் வலியுறுத்து

(எஸ்.நிதர்ஷன்)

**"ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பதவிக்கு வருவதற்கு முன்பாக அவரது தேர்தல் விஞ்ஞாபனத்தில் பல்வேறுபட்ட உறுதிமொழிகள் வழங்கப்பட்டிருந்தன. அதில் முக்கியமாகப் புதிய அரசு பதவியேற்றவுடன் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என்று கூறப்பட்டிருந்தது. ஆனால், புதிய அரசு பதவியேற்று ஒரு வருடம் கடந்த நிலையிலும் மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல், எல்லை நிர்ணயக் குழுவை நியமிப்பதா?**

03 ▶

# அனைவரும் புதிய உத்வேகத்துடன் 2026இற்குள் அடியெடுத்து வைப்போம்

## புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் பிரதமர்

"கடந்த ஆண்டில் நாம் எதிர்கொண்ட சகலவிதமான சவால்களையும் சக்தியாக மாற்றிக்கொண்டு, புதிய உத்வேகத்துடனும் எதிர்பார்ப்புகளுடனும் 2026ஆம் ஆண்டுக்குள் அடியெடுத்து வைக்குமாறு அனைவரையும் அழைக்கின்றேன்."

– இவ்வாறு பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய விடுத்துள்ள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"2026 ஆம் ஆண்டின் விடியலில் நாம் நின்றுகொண்டிருக்கும் இவ்வேளையில், கடந்து வந்த 2025ஆம் ஆண்டை மீளாய்வு செய்வது காலத்தின் தேவையென நான் கருதுகின்றேன்.

03 ▶






'பட்ட காலிலே படும். கெட்ட குடியே கெடும்!' – என்பார்கள். அந்த மாதிரித்தான் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறிதரனுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியும் தோன்றுகின்றது.

அவருக்கு இது போதாத காலம் போலும்.

ஏற்கனவே அரசமைப்புக் கவுன்ஸிலில் அவர் எடுத்த முடிவுகள், தீர்மானங்கள் தமிழ்த் தேசிய அரசியலில் பிய்த்துதறப்படுகின்றது.

இந்தப் பின்புலத்தில் மீண்டும் லஞ்ச், ஊழல் தடுப்பு ஆணைக் குழுவில் நேற்று மற்றொரு முறைப்பாடு அவருக்கு எதிராக செய்யப்பட்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஏற்கனவே சிறிதரனுக்கு எதிராக இதே ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்த சிவில் புத்திஜீவிகள்

04 ▶

### காலி மாநகர சபைக்குள் எதிரணி அடாவடி:

# பெண் உறுப்பினர் உட்பட ஐவர் கைதாகிப் பிணையில் விடுவிப்பு



காலி மாநகர சபையின் பெண் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் மீது நீரத் தாக்குதல் நடத்தி, அரச ஊழியர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் நேற்று காலை கைது செய்யப்பட்ட பெண் உறுப்பினர் உள்ளிட்ட ஐந்து மாநகர சபை உறுப்பினர்களும் நேற்று மாலை காலி நீதிவான் நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

அதற்கமைய காலி நீதிவான் சந்தேக நபர்களை தலா 2 இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் விடுவிக்க உத்தரவிட்டார்.

தேசிய மக்கள் சக்தியின் ஆளுகையின் கீழுள்ள காலி மாநகர சபையின் விசேட பொதுக்கூட்டம் நேற்றுமுன்தினம் மேயர் சுனில் கமேகே தலைமையில் ஆரம்பமானது. இதன்போது, கடந்த அமர்வில் வரவு – செலவுத் திட்டம் மோசடியான முறையில் நிறைவேற்றப்பட்டது என்று கூறி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர். மேயரும் மாநகர சபை பெண் செயலாளரும் இணைந்து தமது வாக்குகளைத் திருடிவிட்டனர் எனக் கூறி எதிர்க்கட்சியினர் கோஷங்களை எழுப்பி சபையில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியிருந்தனர்.

எதிர்க்கட்சியினரின் கடும் கூச்சல்களுக்கு மத்தியிலும் மேயர் சபை நடவடிக்கைகளை முன்னெடுத்துச் சென்றதுடன், வரவு – செலவுத் திட்டம் ஆவணப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபைச் செயலாளரைச் சூழ்ந்துகொண்டு அவர் மீது தமது கைகளில் இருந்த போத்தல்களிலுள்ள நீரை ஊற்றி அநாகரிகமான முறையில் தாக்குதல் நடத்தியிருந்தனர்.

இந்தத் தாக்குதலால் அதிர்ச்சியடைந்த அந்தப் பெண் அதிகாரி சபையில் இருந்து உடனடியாக வெளியேறியிருந்தார். சபைக்குள் ஏற்பட்ட கடும் மோதல் காரணமாகப் பொலிஸார் வரவழைக்கப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

அரச ஊழியர்களுக்குச் அநாகரிகமான முறையில் அழுத்தம் பிரயோகித்தமை மற்றும் கடமைக்கு இடையூறு விளைவித்தமை தொடர்பாக காலி பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து, ஐந்து உறுப்பினர்களும் நேற்று காலை கைது செய்யப்பட்டனர்.

அதற்கமைய ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களான ஜிலித் நிஷாந்த, எம்.எம்.எம். யஸீர், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் நிமாலி சம்பிகா, ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களான பிரபாத் செனவிரத்ன, கபில கொஹோம்பன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸாரால் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்ட பின்னர், அவர்கள் காலி நீதிவான் முன்னிலையில் நேற்று மாலை ஆஜர்படுத்தப்பட்டனர்.

சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகளின் சமர்ப்பணங்களையும், பொலிஸாரின் பிணை ஆட்சேபனைகளையும் பரிசீலித்த நீதிவான், சந்தேகநபர்களைத் தலா 2 இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் விடுவிக்க உத்தரவிட்டார்.

மேலும், சாட்சிகளுக்கு அழுத்தம் கொடுக்கக் கூடாது எனவும், விசாரணைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் பிணை நிபந்தனைகளில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# ஆணையை மீறினால் மக்கள் பாடம் புகட்டுவர்

### அமைச்சர் லால்காந்த எச்சரிக்கை

"இந்த நாட்டு மக்கள் சக்திக்கு முன்னால் வேறு எந்தச் சக்தியும் தாக்குப் பிடித்து நிற்க முடியாது. எனவே, மக்கள் ஆணைக்குப் புறம்பாகச் செயற்பட்டால் மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள்."

– இவ்வாறு அமைச்சர் கே.டி. லால்காந்த எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

"ஆட்சி அதிகாரத்தை இழந்து தவிக்கும் தரப்பானது தேசிய மக்கள் சக்தியின் ஜனநாயக வழியிலான பயணம் தொடர்பில் கவலையடைந்துள்ளது.



எனவே, எமது பயணத்தைக் குழப்புவதற்கு அந்தத் தரப்பினர் முயற்சிக்கின்றனர். இந்தச் சதி நடவடிக்கைக்குச் சில தீய எண்ணம் கொண்ட ஊடகங்களும் துணை நிற்கின்றன.

மக்கள் ஆணைக்கு எதிராகச் செயற்பட்ட அரசுகளுக்கு இந்த நாட்டு மக்கள் தக்க பாடம் புகட்டினர். அதேபோல் மக்களைக் குழப்பும் வகையில் செயற்படும் ஊடகங்களுக்கும் மக்கள் சிறந்த பதிலை வழங்குவார்கள்.

மக்கள் சக்திக்கு முன்னால் வேறு சக்திகள் தாக்குப் பிடித்து நிற்க முடியாது.

ஊழல், மோசடி அற்ற பயணம் காரணமாகவே தேசிய மக்கள் சக்திக்கு எதிராகச் சிலர் செயற்படுகின்றனர். அரசு கவிழும் என்றெல்லாம் கதைகளைப் பரப்பி வருகின்றனர்." – என்றார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## மாகாண சபைத் தேர்தலை...

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை நியமிப்பதா? போன்ற இழுபறிகளில் காலம் கடத்தப்படுகின்றதே தவிர, தேர்தல் வைப்பதற்கான எந்த உத்தேசமும் இருப்பதாகத் தெரியவில்லை."

– இவ்வாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணியின் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-

"தமிழ் மக்களைப் பொறுத்தவரையில், குறைந்த பட்சம் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதனூடாக மாத்திரமே அரசியல் சாசனத்தில் இருக்கக்கூடிய அதிகாரங்களைக் கையிலெடுத்து, இயலக்கூடிய அபிவிருத்தித் திட்டங்களை வடக்கு – கிழக்கில் உருவாக்க முடியும்.

அரசு பதவிக்கு வந்து புதிய அரசியல் சாசனத்தைப் பற்றிப் பேசினாலும்கூட, அந்த அரசியல் சாசனம் வருமா? வராதா? அவ்வாறான அரசியல் சாசனத்தில் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கான ஏற்றுக்கொள்ளக்கூடிய நிரந்தரமான நிலைத்திருப்பதான தீர்வு எட்டப்படுமா? என்ற கேள்விகளும் எழுகின்றன.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில், தமிழ் மக்களுக்கு இன்று இருக்கக்கூடிய சட்டபூர்வமான பொறிமுறை என்பது மாகாண சபை மாத்திரமே. ஆகவே, அந்த மாகாண சபை அதிகாரங்களைக் கையிலெடுக்க வேண்டும் என்ற அடிப்படையில், அதற்கான தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்பதை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வலியுறுத்தியது மாத்திரமல்லாமல், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் அங்கம் வகிக்ககககூடிய ரெலோ, புளொட், சமத்துவக் கட்சி, ஜனநாயகப் போராளிகளுடன் இணைந்து தேர்தலை வைக்க வேண்டும் என்ற அடிப்படையில் வடக்கு, கிழக்கின் பல மாவட்டங்களில் பிரச்சாரங்களையும் முன்னெடுத்து வருகின்றது.

இன்று தமிழரசுக் கட்சியும் இணைந்து தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற பொது விடயத்தில் ஒருமித்துச் செயற்பட ஆரம்பித்திருக்கின்றோம்.

அண்மையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெயசங்கரைத் தமிழ் கட்சிகள் சந்தித்தபோது, மாகாண சபைக்கான தேர்தலை நடத்துவதற்கான அழுத்தங்களை இலங்கை அரசுக்கு இந்தியா கொடுக்க வேண்டும் என்று கோரிய போது கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் அதனை ஏற்றுக்கொண்டார்.

ஆகவே, மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்பதில் சகல கட்சிகளும் ஒரு உடன்பாட்டுக்கு வந்திருக்கின்றன என்பதுதான் நிதர்சனமான உண்மை. இதன் மூலம் இந்த விடயத்தில் நாங்கள் ஒன்றாகவே இருக்கின்றோம் என்பதை இந்தியாவுக்கும் தெளிவுபடுத்தியிருக்கின்றோம்.

தமிழ் மக்களுக்கான நிரந்தர தீர்வு என்பது ஒற்றையாட்சிக்கு வெளியே தான் இருக்க முடியும் என்பதில் தமிழ்க் கட்சிகளுக்குள் ஒருமித்த கருத்து நிலவுகின்றது. அது சமஷ்டியாகவோ, தேசங்களின் கூட்டாட்சியாகவோ அல்லது வேறு விதமாகவோ அமையலாம். ஆகவே புதியதோர் அரசியல் சாசனமானது தமிழ் மக்களுக்கான எத்தகைய தீர்வை உள்ளடக்கியிருக்க வேண்டும் என்பதில் தமிழ்த் தரப்பு அனைத்தும் ஒருமித்த கருத்துக்கு வந்து அந்த விடயம் அரசுக்கு முன்மொழியப்பட வேண்டும்.

சந்திரிகா குமாரதுங்கா பண்டாரநாயக ஜனாதிபதியாக இருந்தபோது, பிராந்தியங்களின் ஒன்றியம் என்ற அடிப்படையில் ஒரு தீர்வு முன்மொழியப்பட்டு அது நாடாளுமன்றம் வரை வந்தது. இதனைப் போலவே இன்னும் பல முன்மொழிவுகள் இருக்கின்றன.

ஆகவே, தமிழ்க் கட்சிகள் ஒன்றுகூடி சரியான ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைப்பதே பொருத்தமானதாக இருக்கும். இதனை விடுத்து நான் மாத்திரமே சமஷ்டியைப் பற்றிப் பேசினேன் என்றும் மற்றவர்கள் வாய்மூடி இருந்தார்கள் என்றும் கூறுவது குறுகிய அரசியல் லாபம் கொண்டதாக இருக்குமே தவிர, அர்த்தபுஷ்டியான ஒரு தீர்வை நோக்கிச் செல்கின்ற வழிமுறையாக இருக்காது.

தமிழ்த் தேசியப் பரப்பில் இருக்கக்கூடிய கட்சிகள் தனித்தனியே நின்று எதனையும் சாதிக்க முடியாது. புலம்பெயர் தேசத்திலிருப்பவர்களும்கூட சமகால அரசியல் சூழ்நிலைகளைப் புரிந்துகொண்டு, பிராந்திய, உலக அரசியல் நிலைமைகளைப் புரிந்துகொண்டு, தமிழ் மக்களின் இருப்பைப் பாதுகாக்கக்கூடிய முடிவுகளை நோக்கிச் செல்ல வேண்டுமே தவிர, அவர்களுடைய அணுகுமுறைகள் கொள்கைகள் என்பவை புலத்தில் இருப்பவர்களின் முயற்சிகளை முறியடிப்பதாக இருக்கக்கூடாது.

ஈழ விடுதலைக்கான மிகப் பலமான ஆயுதப் போராட்டம் ஒன்றை முப்பது ஆண்டுகள் நடத்தி பல்வேறுபட்ட தியாகங்களையும் அழிவுகளையும் சந்தித்த தமிழினம் ஒட்டுமொத்தமாக அழிந்து போகும் நிலைக்கு நாங்கள் இடம்கொடுக்கக்கூடாது. ஆகவே, கால சூழ்நிலைக்கேற்ப, மூலோபாயங்களையும் தந்திரோபாயங்களையும் வகுத்துக்கொள்ள வேண்டுமே தவிர, மிகவலிமையாக இருக்கின்றோம் என்ற கற்பனையிலும் பேரம்பேசும் ஆற்றலில் இருக்கின்றோம் என்ற கற்பனையிலும் மிதந்து யதார்த்தத்துக்கு அப்பாற்பட்டு எல்லாம் உடனடியாகக் கிடைத்துவிடும் என்று செயற்படுவது புத்திசாலித்தனம் அல்ல.

போராட்ட காலத்திலும் அதன் பின்னரான இன்றைய காலம் வரையிலும் இந்தியாவை ஆக்ரோஷமாக எதிர்த்து வந்த பலரும் இன்றுதான் இந்தியாவின் நட்பின் அவசியத்தைப் புரிந்துகொண்டிருக்கின்றார்கள். எமக்கு அண்மையில் இருக்கக்கூடியதும் எட்டு கோடி தமிழ் மக்களையும் நூற்றுநாற்பது கோடி மக்களையும் கொண்ட உலக வல்லரசுகளில் மதிக்கக்கூடிய ஒன்றான இந்தியாவின் நட்பு அவசியம் என்பதை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மிக நீண்டகாலமாவே வலியுறுத்தி வந்திருக்கின்றது. இன்று அதனை பல்வேறு தமிழ்த்தரப்புகள் புரிந்துகொண்டிருப்பது வரவேற்கத்தக்கது மாத்திரமல்லாமல், தீர்வினை நோக்கிப் பயணிப்பதற்கான நல்ல ஆரம்பமாகவே இதனை நாங்கள் கருதுகின்றோம்.

இனியாவது அனைவரும் கற்பனையிலிருந்து விடுபட்டு யதார்த்தத்துடன் சிந்தித்து எமது மக்களுக்கான விடியலை நோக்கி ஐக்கியத்துடன் முன்னேறுவோம். தொடர்ச்சியாக கட்சிகளுக்கு மேல் குற்றப் பத்திரிகை வாசிப்பதை விடுத்து, தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக ஐக்கியப்பட்டுச் செயற்படுவோரை பலப்படுத்துவதற்கும் மக்கள் முன்வரவேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம்." – என்றுள்ளது.

---

## அனைவரும்...

ஒரு மக்கள் நல அரசாக, பல தீர்க்கமானமற்றும் முன்னோடியான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடிந்த ஓர் ஆண்டாக 2025ஆம் ஆண்டை எண்ணி ஒருபுறம் நாம் மகிழ்ச்சியடைய முடியும்.

புதிய அரசியல் கலாசாரமொன்றின் அடிப்படையில், அரச நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்தவும், ஊழலற்ற வினைத்திறன் மிக்க அரச சேவைக்கான அடித்தளத்தை அமைக்கவும் எம்மால் முடிந்துள்ளதென நான் நம்புகின்றேன்.

பொருளாதார ஸ்திரத்தன்மை, சர்வதேச ரீதியாக எமது நாட்டின் மீது கட்டியெழுப்பப்பட்டு வரும் நேர்மறையான கண்ணோட்டம், வெளிப்படைத்தன்மை மிக்க ஆட்சி முறைமை மற்றும் சட்டத்தின் மேலாதிக்கத்தை உறுதிப்படுத்தியமை போன்ற பல பிரதான துறைகளின் ஊடாக 2025ஆம் ஆண்டைப் பற்றி நாம் திருப்தியடையலாம்.

எவ்வாறாயினும், 2025ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் எதிர்கொள்ள நேர்ந்த துரதிர்ஷ்டவசமான இயற்கை அனர்த்தம், எமது நாட்டுக்குச் சவாலானதொரு காலப்பகுதியாக அமைந்தது. அது நம் அனைவரது மனங்களையும் கவலையில் ஆழ்த்திய போதிலும், அத்தகைய இக்கட்டான தருணத்திலும் இலங்கையர்களாக நாட்டு மக்கள் வெளிப்படுத்திய சகோதரத்துவம், மனிதாபிமானம் மற்றும் ஒருவருக்கொருவர் உதவிக்கரம் நீட்டிய விதம் குறித்து இன்று உலகளவில் பேசப்பட்டு வருகின்றது.

அந்தச் சவால்களை வெற்றிகொண்டு, அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் மனங்களை ஆற்றி, சீர்குலைந்த அவர்களின் வாழ்வாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் உறுதியான அர்ப்பணிப்புடனேயே 2026ஆம் ஆண்டுக்குள் நாம் கால்பதிக்கின்றோம்.

கல்வித் துறையில் தரமான, அதே நேரம் நிலையான மாற்றத்தை ஏற்படுத்துகின்ற, கல்வித்துறையின் மாற்றம், அரச சேவை உட்பட அனைத்துத் துறைகளையும் டிஜிட்டல் மயமாக்கல், சாத்தியமான புதிய எண்ணக்கருக்களைக் கொண்ட முயற்சியாளர்களுக்கும் படைப்பாளர்களுக்கும் உலகளாவிய ரீதியில் முன்னேறுவதற்கான சூழலை உருவாக்குதல், போதைப்பொருள் அற்ற – சுற்றாடலை நேசிக்கும் – மனிதாபிமானம் மிக்க சமூகத்தைக் கட்டியெழுப்புதல் போன்ற பல சிறப்பான நோக்கங்களுடன், இன, மத மற்றும் கட்சிப் பேதங்களற்ற பலமான இலங்கை என்ற அடையாளத்துடன் இந்த நாட்டைக் கட்டியெழுப்பும் பொறுப்பு அரசு உட்பட ஒட்டுமொத்த நாட்டு மக்களுக்கும் இருக்கின்றது என்பதை இவ்வேளையில் நினைவூட்ட விரும்புகின்றேன்.

கடந்த ஆண்டில் நாம் எதிர்கொண்ட சகலவிதமான சவால்களையும் சக்தியாக மாற்றிக்கொண்டு, புதிய உத்வேகத்துடனும் எதிர்பார்ப்புகளுடனும் 2026ஆம் ஆண்டுக்குள் அடியெடுத்து வைக்குமாறு உங்களை அழைக்கின்றேன். உங்கள் அனைவருக்கும் அமைதியும், மகிழ்ச்சியும், சுபீட்சமும் நிறைந்த வெற்றிகரமான இனிய புத்தாண்டு நல்வாழ்த்துகள்!" – என்றுள்ளது.

# கிளிநொச்சியில் 5 முறைகள் சுட்ட பொலிஸ்! தப்பிச் சென்றது கள்ள மண் ஏற்றிய டிப்பர்!!

கிளிநொச்சியில் சட்டவிரோத மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் மீது பொலிஸார் ஐந்து தடவைகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட நிலையில் டிப்பர் வாகனம் வீதியில் மணலைக் கொட்டியபடி தப்பியோடியுள்ளது.

சட்டவிரோத மணல் ஏற்றிய டிப்பர் வாகனத்தைப் பொலிஸார் மறிக்க முற்பட்டபோது, சாரதி அதை நிறுத்தாமல் தொடர்ந்து செலுத்தியுள்ளார்.

பரவிப்பாஞ்சான் வீதியூடாகச் செல்ல முற்பட்ட குறித்த டிப்பர் வாகனத்தைத் துரத்திச்சென்று பொலிஸாரால் ஐந்து தடவைகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் டிப்பர் வாகனம் வீதியில் மணலை கொட்டியபடி தப்பிச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### சகலரும்...

1977 ஆம் ஆண்டுக்குப் பிறகு மிகக் குறைந்த வரவு – செலவுத் திட்ட பற்றாக் குறையைப் பதிவு செய்தல், 2007 ஆம் ஆண்டுக்குப் பிறகு நாட்டின் கூடுதலான அரச வருவாயை ஈட்டுதல், வரலாற்றில் முதல் முறையாக முதன்மை கணக்கு மிகையைப் பெற்றமை, பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதி வருவாயை சுமார் 17 பில்லியன் டொலர்களாக அதிகரித்தமை, எமது நாட்டு வரலாற்றில் அரச வருவாய் இலக்குகளை விஞ்சும் ஒரே ஆண்டாக 2025 ஆம் ஆண்டை மாற்றியமை மற்றும் அண்மைக் காலத்தில் சுற்றுலா பயணிகள் அதிகளவில் நாட்டுக்கு வருகை தந்த வருடமாக பதிவானமை போன்றன 2025 ஆம் ஆண்டில் அடையப்பட்ட குறிப்பிடத்தக்க பொருளாதார சாதனைகளாகும்.

இலங்கை மக்களின் நீண்டகால எதிர்பார்ப்பாக இருந்த ஊழல் நிறைந்த அரசியல் முறைமைக்குப் பதிலாக பொதுமக்களுக்கு நேர்மையாக சேவை செய்யும்ஒருசிறந்தஅரசியல்கலாசாரத்தை நாட்டில் உருவாக்கவும், எதிர்காலச் சந்ததியினரைப் போதைப்பொருள் அச்சுறுத்தலில் இருந்து விடுவிப்பதற்கான “முழு நாடுமே ஒன்றாக “ தேசிய செயற்பாட்டைப் போன்ற திட்டங்களைச் செயற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டதோடு இவை 2025 ஆம் ஆண்டு நாட்டின் அரசியல் மற்றும் சமூக மாற்றத்தில் ஒரு திருப்பு முனையான ஆண்டாகப் பதியப்படுகின்றது.

அண்மைக் காலங்களில் நாடு எதிர்கொண்ட மிகப்பெரிய இயற்கைப் பேரழிவின் சவாலை கடந்த ஆண்டு நாங்கள் ஒன்றாக எதிர்கொண்டோம்.

நமது மக்களிடையே உள்ள மனித நேயப் பண்பானது எந்தப் பேரழிவினாலும் பறிக்க முடியாத ஒரு சிறந்த குணம் என்பதைத் தெளிவாக நிரூபித்ததோடு நாடு முழுவதும் உள்ள மக்கள் பாதிக்கப்பட்ட சகோதர மக்களின் துயரத்தில் கைகோர்த்தார்கள்.

இந்தச் சவாலை எதிர்கொள்வதில் எங்களுக்கு ஆதரவளித்த வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களுக்கும், மீளெழுச்சிக்கு நட்புறவின் பலத்தை வழங்கிய உலகெங்கிலும் உள்ள அனைத்து நட்பு நாடுகளுக்கும், அனர்த்த நிலையில் அயராது உழைத்த பொலிஸார் மற்றும் முப்படைகளுக்கும், இந்த நாட்டின் அரச உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நாம் ஒன்றாக, இன்னும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது.

உலக வரலாற்றில் வீழ்ச்சியடைந்த ஒவ்வொரு நாட்டையும் கட்டியெழுப்புவதில் அந்த மக்களின் இலட்சியமும் தைரியமும் பக்கபலமாக இருந்தது. நமது அன்பான பிரஜைகளின் அசைக்க முடியாத தைரியத்தின் பலனால், நாம் முன்பு இருந்ததை விட சிறந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியும் என்று உறுதியாக நம்புகின்றோம்.

புத்தாண்டு வருகை கடந்த ஆண்டின் அனுபவங்களை மீள்பரிசீலனை செய்வதற்கு வாய்ப்பு அளிப்பதோடு, புத்தாண்டு தொடர்பில் சாதகமான மனப்பாங்குகளுடன் மீளத் திட்டமிடுவதற்கும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்குகின்றது.

நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான திட்டத்தில் அசைக்க முடியாத உறுதியுடனும் நம்பிக்கையுடனும் சகோதரத்துவத்துடன் கைகோர்க்க அனைவருக்கும் நான் அழைப்பு விடுகின்றேன்.

மலர்ந்த 2026 புத்தாண்டு உங்கள் அனைவரினதும் எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வெற்றிகரமான புத்தாண்டாக அமைய வாழ்த்துகின்றேன்.” – என்றுள்ளது.

### இரகசியம் பரகசியம்...

அமைப்பின் சஞ்சய் மாவத்த என்பவரே நேற்றும் புதிய முறைப்பாடு ஒன்றைச் செய்திருக்கிறார்.

ஏற்கனவே சிறிதரனுக்கு எதிராக அவர் செய்திருக்கின்ற முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை ஆரம்பித்துள்ள லஞ்ச, ஊழல் தடுப்பு ஆணைக்குழு இது தொடர்பாக ஆதாரங்களைத் தரும்படி முறைபாட்டாளரிடம் கோரியிருந்தது என்பது தெரிந்ததே.

நேற்று அளித்த முறைப்பாடும் புதிய குற்றச்சாட்டு அல்ல. ஏற்கனவே நாடாளுமன்றத்தில் அருச்சுனா இராமநாதன் எம்.பி. சிறிதரனுக்கு எதிராக சுமத்திய குற்றச்சாட்டுதான். அது நாடாளுமன்ற உரையாக முடிந்துவிடும் என்று கருதி உத்தியோகபூர்வ முறைப்பாட்டை இந்த சஞ்சய் மாவத்த நேற்றுச் செய்திருக்கிறார்.

ரணிலின் அரசினுடைய இறுதிக் கட்டத்தில், ஜனாதிபதி தேர்தலுக்கு சில நாள்களுக்கு முன்னர், பூநகரியில் சூரிய மின் உற்பத்திக்கு 1,200 ஏக்கர் நிலத்தைத் தாரைவாக்கும் திட்டத்திற்கான ஒப்பந்தம் கைச்சாத்தானது என்று கூறப்படுகின்றது.

அதற்கான ஒழுங்குகளைச் செய்து கொடுத்ததில் சிறிதரன் 70 லட்சம் ரூபா கையூட்டுப் பெற்றுக் கொண்டார் என்று அருச்சுனா இராமநாதன் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். அதே விடயத்தை நேற்றைய முறைப்பாட்டில் சஞ்சய் மாவத்த அப்படியே ஒப்புவித்திருக்கிறார் என்று கூறப்படுகிறது.

இந்தக் குற்றச்சாட்டுக்கு ஆதாரமாக சில ஆவணங்களை காட்டி நாடாளுமன்றில் அருச்சுனா இராமநாதன் உரையாற்றிய போதிலும், அவை சிறிதரனுடன் தொடர்புபடுத்தும் விடயங்கள் அடங்கியவையாகத் தெரியவில்லை.

இப்போது லஞ்ச, ஊழல் தடுப்பு ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்துள்ள சஞ்சய் மாவத்த புதிதாக ஏதும் ஆதாரங்களை சமர்ப்பித்து இருக்கிறாரா என்பதும் தெரியவில்லை.

மலிந்தால் சந்தைக்கு வரும் அப்போது பார்த்துக் கொள்ளலாம்.

* * *

சில குற்றங்களில் குற்றவாளிகள் கையும் மெய்யுமாக பிடிபட்டாலும் கூட, நீதிமன்றத்தினால் குற்றவாளியாக காணப்பட்டு, தண்டனை விதிக்கப்படும் வரை அவர் சந்தேக நபர்தான். குற்றவாளி அல்லர்.

எனினும், சில குற்ற வழக்குகளில் குற்றம் சுமத்தப்பட்டதும் அவர்கள் அரச ஊழியர்களாக இருந்தால் உடனடியாக சேவையிலிருந்து இடை நிறுத்தப்படுவார்கள்.

முக்கியமாக கையூட்டு அல்லது லஞ்ச வழக்கில் அரச ஊழியர் ஒருவர் சிக்கினால் அவர் தொடர்ந்து பதவி வகிக்க முடியாது. வழக்கு விசாரணை முடியும் வரை அவர் சேவையிலிருந்து இடை நிறுத்தப்பட்டு விடுவார்.

ஆனால் பிரதேச சபையின் தலைவர் ஒருவர் கையூட்டு வழக்கில் கையும் மையமாக பிடிபட்டாலும், விளக்கமறியல் காலத்தை முடித்துக் கொண்டு, பிணையில் வெளியே வந்ததும் தொடர்ந்து அந்தப் பதவியை ஆற்ற முடியும் என்று சில தரப்புகள் கூறுகின்றன. தாபனக் கோவை விதிகளின்படி அது சரியா என்பது தெரியவில்லை.

நாடாளுமன்ற உறுப்பினர் அல்லது ஒரு பிரதேச சபை உறுப்பினர் அல்லது உள்ளூராட்சி சபை உறுப்பினர் குற்றச்சாட்டப்பட்டாலும் குற்றவாளியாக காணப்படும் வரை அந்த உறுப்புரிமையை வகிக்கின்றமை வேறு விடயம்.

ஆனால் பிரதேச சபை தலைவர் என்பது ஒரு வகையில் நிறைவேற்ற அதிகார விடயங்களைக் கொண்ட ஓர் அரச நிர்வாகி. அத்தகையவர் லஞ்ச, ஊழல் வழக்கில் நேரடியாகக் கைது செய்யப்பட்ட பின்னர் பிணையில் வந்து, மீண்டும் கடமைக்குச் சமூகம் தருவது என்பது குழப்பத்தை ஏற்படுத்தும் விடயமாகவே உள்ளது.

குச்சவெளி பிரதேச சபைத் தலைவர் லஞ்சம் வாங்கிய சமயம் கையும் மையமாக பிடிபட்டார் என செய்திகள் வெளியாகி இருந்தன. முரசிலும் அந்தச் செய்தியைப் பிரசுரித்து இருந்தோம். சில மாதங்கள் விளக்கமறியலில் இருந்த பின்னர் இப்போது அவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

பிணையில் வெளியே வந்ததும், அவர் மீண்டும் பிரதேச சபை தலைவராகச் செயல்படுகிறார். அது மாத்திரமல்ல, அங்கு தமிழரசுக் கட்சியின் ஓர் உறுப்பினரைப் பார்த்த "நீதான் என்னை லஞ்ச – ஊழல் வழக்கில் சிறை பிடித்துக் கொடுத்தாய். உன்னால் என்னுடைய உயிருக்கு ஆபத்து இருக்கின்றது. நீ ஆயுததாரி. உன்னிடம் ஆயுதம் இருக்கின்றது" – என்று சபை அமர்வின் போதே அச்சுறுத்தல் பாணியில் அந்தப் பிரதேச சபைத் தலைவர் கூறினார் என்றும் செய்தி வெளியாகி உள்ளது.

இப்படி லஞ்ச, ஊழல் வழக்கில் சிக்கும் உள்ளூராட்சி சபையின் ஒரு தலைவருக்கு எதிராக இத்தகைய விடயங்களில் தாபனக்கோப்பை விதிகள் என்ன கூறுகின்றன என்பதை ஒரு தடவை அலசிப் பார்க்க வேண்டிய தேவை இப்போது எழுந்துள்ளது.


SV MEDIA
a one
media network
அனைவருக்கும்
இனிய புத்தாண்டு
வாழ்த்துகள்
2026
tamil one TV HD
முரசு
வணக்கம்
V தமிழ்
Ceylon MURASU
VTV HD




# கோர விபத்தில் ஐவர் காயம்!

(க.மகாதேவன்)

ரத்னபுர – எம்பிலிப்பிடிய பிரதான வீதியின் திரிவாணகட்டிய பகுதியில் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற கோர விபத்தில் ஐவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்துக்குள்ளான மினி வானில் பயணித்த குழு, மொனராகலை பகுதியில் நடைபெற்ற மரண நிகழ்வு வீடு ஒன்றில் பங்கேற்று விட்டு மீண்டும் இரத்தினபுரி நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த போதே விபத்தில் சிக்கியுள்ளது.

வானின் சாரதிக்கு நித்திரை கலக்கம் ஏற்பட்டமையால் வான் கட்டுப்பாட்டை இழந்து எதிரே வந்த லொறி மீது மோதி விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது லொறி வீதியின் குறுக்கே புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் காயமடைந்த 5 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதில் ஒருவரின் நிலைமை மோசமாக உள்ளது என்று வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.






# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நீடிக்கும் இழுத்தடிப்பு

அரசாங்கம் தன்னுடைய நிர்வாகத்தில் நிலவும் மோசடி மற்றும் ஊழலை மறைப்பதற்காகவே, கணக்காய்வாளர் நாயகத்தை நியமிக்கும் நடவடிக்கையை வேண்டுமென்றே தாமதப்படுத்துவதாக மொட்டுக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.

ஜனாதிபதி அந்தப் பதவிக்கு தமது நெருங்கிய கூட்டாளியான இராணுவ அதிகாரியை நியமிக்கும் முயற்சியில் ஈடுபட்டார். அது தடுக்கப்பட்டதை அடுத்து, அதைத் தடுத்த அரசமைப்புக் கவுன்சிலை சில அமைச்சர்கள் சமீபத்தில் கடுமையாக விமர்சித்துள்ளனர் என அவர் சுட்டிக் காட்டினார்.

கணக்காய்வாளர் நாயகம் பதவி எட்டு மாதங்களாக காலியாக உள்ளது, இது அரசாங்க நடவடிக்கைகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் குறித்த கவலைகளை எழுப்புகிறது என்பதும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இறக்குமதிக்கான கேள்விப்பத்திர அழைப்புகளில் முறைகேடுகள், துறைமுகத்திலிருந்து 323 கொள்கலன்களை அங்கீகரிக்கப்படாமல் வெளியேற்றியமை மற்றும் தரமற்ற மருந்துகள் சுவீகரிப்பு மீதான விசாரணைகள் உள்ளிட்ட தொடர்ச்சியான ஊழல் நடவடிக்கைகளுடன் கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு பொருத்தமானவரை நியமிக்கத் தவறிய விவகாரம் தொடர்புடையது என நாமல் ராஜபக்ஷ சுமத்தும் குற்றச்சாட்டை இலகுவில் புறம் ஒதுக்கிவிட முடியாது.

இத்தகைய தாமதங்கள் இலங்கையின் வெளிநாட்டு உதவியை பாதிக்கக்கூடும் என்று நாமல் ராஜபக்ஷ எச்சரித்தார்.

“உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி போன்ற சர்வதேச அமைப்புகளிடமிருந்து கடன்கள் மற்றும் உதவிகள் போன்றவற்றைப் பெறுகின்ற விடயம் முறையான கணக்காய்வுகளைப் பொறுத்தது. ஒரு தகுதியான கணக்காய்வாளர் நாயகம் இல்லாமல், இந்த முக்கியமான நிதிகள், கடன்கள் பெறுவது ஆபத்தில் - நெருக்கடியில் - சிக்கலாம்” என்று அவர் கூறினார்.

கணக்காய்வாளர் நாயகம் இல்லாதமை நாட்டின் நம்பகத்தன்மைக்கும் சர்வதேச ஆதரவைப் பெறும் திறனுக்கும் கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது என்பதை வலியுறுத்தி, அரசாங்கம் தனது அணுகுமுறையை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று ராஜபக்ஷ வலியுறுத்துவதில் நியாயம் - அர்த்தம் - இருக்கவே செய்கின்றது.

கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு பொருத்தமான ஒருவரை நியமிக்கும் நடவடிக்கையை அரசாங்கம் இன்னும் எவ்வளவு காலத்துக்கு இழுத்தடிக்கப் போகின்றது?

Gunaams Super Market




வாடிக்கையாளர்கள் மற்றும்
நலன்விரும்பிகள் அனைவருக்கும்
பிறந்திருக்கும் புத்தாண்டு
நல்லாண்டாக அமைய
எமது நல்வாழ்த்துகள்

1145 Morningside Ave unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998




# தையிட்டியில் பொலிஸ் அடாவடியை ஆட்சேபித்து வலி வடக்கு சபை அமர்வில் கறுப்புப் பட்டி எதிர்ப்பு

### காலை வாரி தேசிய மக்கள் சக்தி மட்டும் குத்துக்கரணம்

தையிட்டி விகாரைக்கு எதிராக அமைதி வழிப் போராட்டம் நடத்தியவர்கள் மீது தாக்குதல் நடத்தியமை மற்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கைது செய்தமை ஆகியவற்றைக் கண்டித்து வலி. வடக்கு பிரதேச சபையில் தேசிய மக்கள் சக்தியினரைத் தவிர ஏனைய உறுப்பினர்கள் கறுப்பு பட்டி அணிந்து சபை அமர்வில் கலந்து கொண்டனர்.

வலி. வடக்கு பிரதேச சபையின் விசேட அமர்வு நேற்றைய தினம் புதன்கிழமை தவிசாளர் சோ. சுகிர்தன் தலைமையில் நடைபெற்றது.


அதன் போது, கடந்த 21ஆம் திகதி தையிட்டி விகாரை முன்பாக நடைபெற்ற போராட்டத்தில் பொலிஸார் மேற்கொண்ட தாக்குதல் சம்பவம் மற்றும் வேலன் சுவாமி , வலி. கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தி.நிரோஷ் ஆகியோருடன் வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர்கள் மூவர் என ஐவரை பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்திய நிலையில், நீதிமன்றினால் அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

அந்நிலையில் பொலிஸாரின் தாக்குதலுக்கு இலக்கான வேலன் சுவாமி மற்றும் வலி. கிழக்கு பிரதேச சபை தவிசாளர் ஆகியோர் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்றனர்.

இந்த சம்பவங்களைக் கண்டித்தும், பொலிஸாரின் அடாவடிக்கு எதிர்ப்பு தெரிவித்தும், வலி. வடக்கு பிரதேச சபையின் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் தவிர ஏனைய கட்சி உறுப்பினர்கள் கறுப்பு பட்டி அணிந்தவாறு சபை அமர்வில் கலந்து கொண்டனர்.

அதேவேளை கடந்த 18ஆம் திகதி நடைபெற்ற சபை அமர்வில், தையிட்டியில் கட்டப்பட்டுள்ளது சட்டவிரோதமான கட்டடம்தான், அதற்க்கு எதிர்ப்பு தெரிவித்து கட்சி பேதமின்றி போராடுவது என்றால் நாமும் போராட்டத்தில் கலந்து கொள்வோம் என சபையில் கூறிய தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் அன்று சபை அமர்வு முடிந்து மூன்றாம் நாள் நடைபெற்ற போராட்டத்தில் கலந்து கொள்ளாது , காங்கேசன்துறை கடற்கரையில் "கிளீன் ஸ்ரீலங்கா" திட்டத்தின் கீழ் பொலிஸாருடன் இணைந்து சிரமதான பணிகளில் ஈடுபட்டிருந்தனர். அந்த வேளையே , தையிட்டி விகாரை முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது பொலிஸார் அடக்கு முறையைப் பிரயோகித்து, வலி. வடக்கு பிரதேச சபையின் மூன்று உறுப்பினர்கள் உள்ளிட்ட ஐவரை கைது செய்திருந்தனர்.

போராட தாமும் வருவார்கள் என உறுதி அளித்த தேசிய மக்கள் சக்தியினர் போராட்டத்தில் கலந்து கொள்ளாது காலை வாரி இருந்தாலும் , தமது சக உறுப்பினர்கள் மூவர் கைது செய்யப்பட்டமைக்கு கூட எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர்கள் சிலர் கவலை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.








# 16,000 வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் இரண்டு பேர் கடற்படையினரால் கைது

(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

இலங்கைக் கடற்படையினர், பொலிஸ் மற்றும் பொலிஸ் அதிரடிப் படை ஆகியவையுடன் இணைந்து, கொழும்பு துறைமுகம் மற்றும் ராகமவில் உள்ள பெரலந்த பகுதியில் வியாழக்கிழமை (25ஆம் திகதி) மற்றும் திங்கட்கிழமை (29 ஆம் திகதி) ஆகிய இரு தினங்களில் கூட்டுத் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதன் போது சட்டவிரோத விற்பனைக்காக தயார்நிலையில் வைத்திருந்த சுமார் பதினாறாயிரம் வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கொழும்பு துறைமுகத்தில், கொழும்பு துறைமுக காவல்துறையுடன் இணைந்து,



மேற்கு கடற்படை கட்டளையின் இலங்கை கடற்படை கப்பல் ரங்கல நடத்திய நடவடிக்கையின் போது, சட்டவிரோத விற்பனைக்காக தயார் நிலையில் வைத்திருந்த சுமார் ஆயிரம் வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் ஒரு சந்தேக நபரும், ராகம பெரலந்த பகுதியில், கோனஹேன பொலிஸ் சிறப்பு அதிரடிப்படையுடன் இணைந்து இலங்கை கடற்படை கப்பல் கெமுனு நடத்திய நடவடிக்கையின் போது, சட்டவிரோதமாக வைத்திருந்த பதினைந்தாயிரம் வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் ஒரு சந்தேக நபருமாக, இருவர் கைது செய்யப்பட்டனர்.

இந்த நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்ட 54 மற்றும் 65 வயதுடைய சந்தேக நபர்கள் பெலியத்த மற்றும் ராகம பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். மேலும், சந்தேக நபர்கள் வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் கொழும்பு துறைமுக காவல்துறையினரிடமும் ராகம காவல் நிலையத்திடமும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

# தாளையடி சுற்றுலாக் கடற்கரையில் உயிர்ப் பாதுகாப்பு குறித்து ஆராய்வு

(பூ.லின்ரன்)

அதிக எண்ணிக்கையான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்லும் யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு தாளையடி கடற்கரையில் மக்களின் உயிர்ப் பாதுகாப்புக் குறித்து ஆராயப்படுவதாகவும், அங்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பலப்படுத்தப்படும் எனவும் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுடைய சமாசத் தலைவர் த.தங்கரூபன் தெரிவித்துள்ளார்.

தாளையடி கடற்கரைக்கு வரும் சுற்றுலா பயணிகள் கடலில் மூழ்கி உயிரிழக்கின்றமை தொடர்பாக பிரதேச ஊடகவியலாளரால் சமாசத் தலைவரிடம் அவருடைய அலுவலகத்தில் வைத்துக்



கேள்வி எழுப்பப்பட்ட போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

மாரி காலம் என்று அழைக்கப்படும் கார்த்திகை,மார்கழி மாதங்களில் கடல் கொந்தளிப்பாகக் காணப்படுவதால் இந்த காலப்பகுதியில் கடலுக்குள் நீராடுபவர்கள் உயிரிழப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன.

பொலிஸார் மற்றும் கடற்தொழில் அமைச்சருடன் கலந்தாலோசித்து விட்டு கார்த்திகை, மார்கழி மாதங்களில் கடலில் இறங்குவதற்குத் தடை விதிக்கப்படும்.

தாளையடிக் கடற்கரை பகுதியில் பாதுகாப்பை பலப்படுத்துவதற்காக நாங்கள் ஆலோசனைகளை மேற்கொண்டு வருகிறோம். இரண்டு பாதுகாவலர்களைப் பணியில் அமர்த்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

தாளையடி கடற்கரைக்கு வரும் சுற்றுலா பயணிகள் பாதுகாப்பு எச்சரிக்கைகளை கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

# ஆபத்தான வடமராட்சி கிழக்கு கடலில் யாரும் நீராடுவதற்கு இறங்க வேண்டாம்



## பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர்

(பூ.லின்ரன்)

ஆபத்தான வடமராட்சி கிழக்கு கடலில் யாரும் நீராடுவதற்கு இறங்க வேண்டாம் என பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் உதயகுமார் யுகதீஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடகீழ் பருவ மழை காலம் ஆரம்பிக்கப்பட்டு கடல் கொந்தளிப்புப்பாக காணப்படுவதாகவும் இதனால் உயிரிழப்புக்கள் ஏற்படுவதாகவும், சுற்றுலா பயணிகள் உட்பட வடமராட்சி கிழக்கு பிரதேசத்திற்கு வருகைதருவோர் கடலில் இறங்கி நீராட வேண்டாம் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்

# கிளிநொச்சி நகர்ப பகுதிகளில் பண்டிகைக் காலத்தில் விசேட உணவுப் பாதுகாப்பு பரிசோதனை நடவடிக்கை

(த.சுபேசன்)

கரைச்சி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட கிளிநொச்சி நகர்ப் பகுதியில் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு உணவு கையாளும் நிலையங்களில் பொது சுகாதார பரிசோதகர்களால் விசேட உணவுப் பாதுகாப்புப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

விசேட பண்டிகைக்காலம் மற்றும் பொதுமக்களிடமிருந்து கிடைத்த முறைப்பாடுகளுக்கமைய டிசெம்பர் மாதம் பதினேழாம் திகதி முதல் மாத இறுதி வரையான காலத்தில் தெரிவு செய்யப்பட்ட ஆறு நாள்களில் விசேட பரிசோதனைகள் பெரியளவில் மேற்கொள்ளப்பட்டன.

கிளிநொச்சி மாவட்ட மேற்பார்வை பொது சுகாதாரப் பரிசோதகர், உணவு மருந்துப் பரிசோதகர்,கரைச்சி, கண்டவளை, பளை மற்றும் பூநகரி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள் இணைந்து குழுக்களாக இவ்விசேட பரிசோதனைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது உணவு விடுதிகள், உணவகங்கள், பல்பொருள் அங்காடிகள், குளிர்களி உற்பத்திச்சாலைகள், தேனீரகங்கள், தெருவோர விற்பனை நிலை



யங்கள், வெதுப்பகங்கள் மற்றும் சந்தை என்பவற்றில் இனங்காணப்பட்ட தீவிர சுகாதார கேடான வியாபாரம் , காலாவதியான பொருள்களை விற்பனைக்காக முன்வைத்தமை, சட்டமீறலுக்குட்பட்ட வகையில் சிட்டுத்துண்டிட்டமை உட்பட பல நடவடிக்கைகளுக்காக வழக்குத் தாக்கல் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளமையோடு சுகாதாரத்துக்கு கேடான பெருமளவான உணவுப்பொருள்கள் கைப்பற்றப்பட்டு உரிமையாளரின் சம்மதத்துடன் அழிக்கப்பட்டன.

மேலும் சில மோசமான உணவு கையாளும் நிலையங்கள் நிலைய உரிமையாளர்களால் வியாபார நடவடிக்கைகளை நிறுத்தி குறைபாடுகளை திருத்தியமைக்கவும் ஆலோசனைகள் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.


Ruhbins Hospital
2026
5
அனைவருக்கும்
இனிய
புத்தாண்டு
வாழ்த்துகள்
Ruhbins Hospital (PVT) LTD
No 160 Pointpedro Road, Nelliady,Jaffna
Hotline +94 77 248 6642



# மன்னாரில் களை கட்டிய புத்தாண்டு வியாபாரம்

(மன்னார் நிருபர்
எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் நகர சபை பிரிவில் நத்தார், புதுவருட பண்டிகைகளுக்கான வியாபார நடவடிக்கைகளின் இறுதி நாளான நேற்றைய தினம் புதன்கிழமை சூடுபிடித் திருந்தது.,ஆயிரக்கணக்கான மக்கள் மன்னார் நகர பகுதிக்கு வருகை தந்து ஆர்வத்துடன் பொருள்களை கொள்வனவு செய்தனர்.

நத்தார், புதுவருட பண்டிகையை யொட்டி மன்னார் நகர சபையினால் வருடா வருடம் பண்டிகைக்கால வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள கேள்வி கோரல் மூலம் இடம் ஒதுக்கப்பட்டு டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி நள்ளிரவு வரை வியாபார நடவடிக்கைகளுக்கு வசதி செய்யப்பட்டு வருகின்றமை வழமை.

இம்முறையும் உள்ளூர் மற்றும் தென் பகுதி வர்த்தகர்கள் இடங்களைப் பெற்று பண்டிகைக்கால வியாபார நடவடிக் கைகளை முன்னெடுத்தனர்.

நேற்றைய தினம் புதன் கிழமை இறுதி நாள் என்பதுடன் இன்றைய தினம் வியாழக்கிழமைப் புத்தாண்டு பண்டி கைகளைக் கொண்டாடும் வகையிலும் மக்கள் தமக்கு தேவையான பொருள் களைக் கொள்வனவு செய்ய மன்னார் நகரப் பகுதிக்கு வருகை தந்தனர்.

போக்குவரத்து நெரிசல் ஏற்பட்ட போதும், பொலிஸார் விசேட நடவடிக்கை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து நிலைமையை ஒழுங்கு படுத்தினர்.

இம்முறை மன்னார் நகரசபைக்கு பண்டிகைக்கால வியாபார நிலையங்க ளுக்கான இட ஒதுக்கீட்டால் 4 கோடி ரூபாவுக்கும் அதிகமான வருமானம் கிடைக்க பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.







# வவுனியாவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது மகனைத் தேடியலைந்த தந்தை மரணம்

(கி.வசந்தன்)

வவுனியாவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனைத் தேடி வந்த தந்தை ஒருவர் சுகவீனம் காரணமாக மரணமடைந்துள்ளார்.

வவுனியா, சின்னத்தம்பனை, நேரிய குளம் பகுதியை சேர்ந்த வையாபுரி சந்திரன் (வயது 69) என்ற தந்தையே மரணமடைந்துள்ளார்.

இவரது மகனான ஜெயகாந்தன் கடந்த 2008ஆம் ஆண்டு காணாமல் போயிருந்தார். அவரைத் தேடி வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டங்களில் இந்தத் தந்தையுன் கலந்து கொண்டு தனது மகனை கண்டுபிடித்து தருமாறு போராடியிருந்தார். இந்நிலையில் மகனை காணாமலேயே அவர் மரணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





# புது வருடத்தின் நாடாளுமன்ற அமர்வு ஜனவரி 06 முதல் 09 ஆம் திகதி வரை

2026 ஜனவரி மாதத்தின் முதலாவது நாடாளுமன்ற அமர்வு ஜனவரி மாதம் 06 ஆம் திகதி முதல் 09 ஆம் திகதி வரை கூடவுள்ளதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

2026 ஜனவரி மாதத்தின் முதலாவது நாடாளுமன்ற அமர்வு வாரத்துக்கான நாடாளுமன்ற அலுவல்கள் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.




AKSYA'S
FASHION
இனிய புத்தாண்டு
வாழ்த்துகள்
2026
பிறந்திருக்கும் புதுவருடம்
அனைவருக்கும்
சிறப்பான ஆரம்பமாக அமைய
வாழ்த்துகிறோம்

# ‘புதுவருடம் – 2026’ சிறப்பிதழ்



## நம் நாட்டில் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இதய சுத்தத்தோடு எம்மிடையே எவருமில்லை!

### புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் சுட்டிக் காட்டினார் ஆறு திருமுருகன்

எமது நாட்டில் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இதய சுத்தத்தோடு செயற்படுபவர்கள் எம்மிடையே இல்லை. ஆட்சிக்கு வருபவர்கள் எல்லாம் “தீர்ப்போம் தீர்ப்போம்” என்பார்கள். தீர்ப்பதாக இல்லை. அநியாயமாகக் காலம் கடக்கிறது. போன நாள்கள் திரும்பி வராது. இனிய புத்தாண்டு நாளில் நல்லவற்றை எண்ணிப் பிரார்த்தனை செய்வோம்.

இவ்வாறு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத் தலைவரும் சிவபூமி அறக்கட்டளையின் தலைவரும் அகில இலங்கை இந்துமாமன்ற இலங்கை உபதலைவருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் விடுத்துள்ள புத்தாண்டுச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்தப் புத்தாண்டுச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

உலகெங்கும் வாழும் அன்புக்கு உரிய அன்பர்களே! உங்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக. விடைபெற்றுள்ள ஆண்டாகிய 2025 எமக்குத் தந்த நல்ல அனுபவங்கள் பல உண்டு. அவற்றை மனத்தில் இருத்தி விடை கொடுப்போம். புதிய ஆண்டில் புதிய எண்ணங்களோடு எமது வாழ்வைத் தொடர திடசங்கற்பம் பூணுவோம்.

எல்லாத் தெய்வங்களும் இயற்கைத் தெய்வங்களே. இயற்கையை நன்றியோடு போற்றி வணங்குவோம். உலகம் முழுவதும் இன்று இயற்கை பற்றிய அச்சுறுத்தல் உண்டு. இயற்கையை யார் வெல்ல முடியும்? எனவே பஞ்சபூதங்களாகிய நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு அனைத்தும் எமக்குச் சாதகமாக அமைய வேண்டும் என அனைவரும் வேண்டுதல் செய்வோம். எவ்வளவு தூரம் விஞ்ஞானம் வளர்ந்தாலும் இயற்கையை கட்டுப்படுத்த முடியாது. இந்த உண்மையை அனைவரும் உணர்வோம்.

மனித வாழ்வு எமக்குக் கிடைத்த அரிய சந்தர்ப்பம். இவ்வரிய வாழ்வை நாம் நல்ல வண்ணம் அனுபவிக்க வேண்டும். போட்டியும், பொறாமையும், வஞ்சகமும், அறியாமையும் எம் சமூகத்திடைய பல பிளவுகளை உண்டாக்கிக் கொண்டே உள்ளது. அதனால் பகை உணர்வு பெருகிக் கொண்டே உள்ளது. குறிப்பாக பல இன்னுயிர்களை இழந்த எம்மண்ணில் இன்றும் அச்ச உணர்வு வளர்கிறது. ஒத்த வயதுடையவர்கள் ஒருவரை ஒருவர் ஓங்கி வாளால் வெட்டுகிறார்கள். சிலர் துடிக்கின்ற காட்சியை ரசிக்கின்றார்கள். கைபேசி மூலம் இந்தக் காட்சிகளை உலகுக்கு காண்பிக்கிறார்கள். இவை எல்லாம் தர்மத்துக்கு ஆகாது. யாரும் பகையை வளர்க்காதீர்கள். அன்பைப் பெருக்குங்கள். பிறரின் உயிரை எடுக்கும் அளவுக்குத் துணியாதீர்கள். பகுத்தறிவுள்ள மனிதர்களாகிய நாம் பண்பட்டு வாழ வேண்டும். மன் னனிக்கப் பழக வேண்டும். நாமும் நன்றே வாழ்ந்து பிறரையும் நல்ல முறையில் வாழ வைக்க வேண்டும். கல்வி வளர்ந்த வேகத்துக்குக் கருணை வளரவில்லை. அது கவலைக்குரிய விடயம்.

ஒவ்வொரு ஆண்டு பிறக்கும் போதும் உலகில் அகதிகளாக அலையும் மக்களுக்கு விடிவு கிடைக்குமா? என எண்ணுகின்றோம். போரால் வந்த அகதிகள் ஒரு பக்கம், இயற்கை இடரால் வந்த அகதிகள் இன்னொரு பக்கம் என எங்கள் மண் இரண்டு வகைத் துன்பத்தையும் சந்தித்துக் கொண்டேயிருக்கிறது.

எமது நாட்டில் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இதய சுத்தத்தோடு செயற்படுபவர்கள் எம்மிடையே இல்லை. ஆட்சிக்கு வருபவர்கள் எல்லாம் “தீர்ப்போம் தீர்ப்போம்” என்பார்கள். தீர்ப்பதாக இல்லை. அநியாயமாகக் காலம் கடக்கிறது. போன நாள்கள் திரும்பி வராது. சகலரும் சகல உரிமைகளோடும் வாழ வழி பிறக்க வேண்டும். அந்நாள் எந்நாளோ? யாம் அறியோம்.

இனிய புத்தாண்டு நாளில் நல்லவற்றை எண்ணிப் பிரார்த்தனை செய்வோம். அழகான உலகத்தை அன்போடு ரசித்து மகிழ்வோடு வாழ அனைவரும் முயல்வோம்.– என்றுள்ளது.

# ‘புதுவருடம் – 2026’ சிறப்பிதழ்



## பிறந்துள்ள இந்தப் புதிய வருடம் மக்களுக்கு அன்பு நிறைந்த ஆண்டாக அமையட்டும்!

**மன்னார் ஆயர் ஞானப்பிரகாசம் ஆண்டகை புத்தாண்டுச் செய்தியில் தெரிவிப்பு**

எங்களிடத்தில் உள்ள பிரிவினைகளை எல்லாம் நீங்கி புதிய வருடத்தில் நாங்கள் புதிய உணர்வோடு, புதிய சமூகமாக ஒற்றுமையின் சின்னமாக எல்லோரும் ஒன்றுபட்டு வாழவும், நாங்கள் ஒவ்வொரு வரும் சேவை செய்யவும் அழைக்கப் படுகிறோம்.

இவ்வாறு மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு அந்தோனிப்பிள்ளை ஞானப் பிரகாசம் ஆண்டகை புத்தாண்டுச் செய் தியில் தெரிவித்துள்ளார்.

புத்தாண்டை முன்னிட்டு அவர் விடுத் துள்ள வாழ்த்துச் செய்தியில் அவர் இவ் வாறு தெரிவித்துள்ளார். அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2025 ஆம் ஆண்டில் எமக்கு ஏற்பட்ட பேரழிவு நாடு முழுவதையும் அவலத்துக்கு உள்ளாக்கியுள்ளது. எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து இந்த அவலத்தில் இருந்து மீள்வ தற்கு ஒன்றாகப் பாடுபடுகின்றோம். அரசாங்கம் முயற்சியுடன் எல்லா மக்களை யும் ஒரே பார்வையில் மீண்டு எழுந்து வெளிச்சம் உள்ள சமூகமாக மாற எடுக்கும் முயற்சிகள் எல்லாம் பாராட்டுக்குரியது.

ஏனைய சமய சமூக அமைப்புக்கள், தனியாருடைய முயற்சிகள், நன்கொடையா ளர்கள், எல்லோரும் சேர்ந்து எடுக்கும் முயற்சிகள் மிகவும் பாராட்டுக்குரியவை. இதுதான் பேரழிவு எங்களை நிச்சயமாக முடக்கி விட முடியாது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கின்றது.

புதிய வாழ்வை பெற்றுக் கொள்ளவே ஆண்டவர் எமக்கு இன்னும் ஒரு புதிய ஆண்டை தந்திருக்கின்றார். 2026 ஆம் ஆண்டு ஒரு புதிய ஆண்டாக எங்களுக்கு பிறந்திருக்கிறது. இந்த சூழ்நிலையிலே வேதனைகளின் நடுவிலும் ஆண்டவர் நம்மைக் கைவிடவில்லை என்பதை இந்த ஆண்டு உறுதிப்படுத்துகின்றது என்கிற விசுவாச உண்மையோடு உங்கள் ஒவ்வொருவருக்கும் புத்தாண்டு ஆசியை தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இயேசு எங்களுக்கு தருகின்ற ஆசீர் வாதம், புதிய ஆண்டில் எங்களுக்கு தரு கின்ற செய்தி என்ன என்றால் இந்த வருடம் முழுவதும் எழுச்சி மிக்க நாடாக, எழுச்சி மிக்க சமூகமாக நாங்கள் வாழ வேண்டும் மலர வேண்டும் என ஆசிக்கிறேன்.

எங்களை ஆண்டவர் குணமடைய அழைக்கின்றார். நாங்கள் ஒவ்வொருவரும் எங்களுடைய வாழ்வில் உள்ளும், புறமும் குணமடைய வேண்டியவர்களாக இருக்கி றோம். கடவுள் நம்பிக்கை உடையவர்களாக இருக்கின்றோம். கடவுள் பயத்துடன் எங்க ளுடைய வாழ்வில் நல்ல குணமாக்களை நாங்கள் பெற்றுக் கொள்ள இவ்வருடத்தில் நாங்கள் அழைப்பு பெறுகிறோம். அதே வேளை நாங்கள் ஒற்றுமையாக வாழ அழைக்கப்படுகிறோம்.

எங்களிடத்தில் உள்ள பிரிவினைகள் எல்லாம் நீங்கி, புதிய வருடத்தில் நாங்கள் புதிய உணர்வோடு, புதிய சமூகமாக ஒற்று மையின் சின்னமாக எல்லோரும் ஒன்று பட்டு வாழவும், நாங்கள் ஒவ்வொருவரும் சேவை செய்யவும் அழைக்கப்படுகிறோம். நாங்கள் மற்றவர்களுக்காக வாழவும் அழைக்கப்படுகிறோம்.


இந்த அனைத்து நிகழ்வுகளிலும் ஏற்பட்ட பேரழிவுகளின் போதும் எமக்கு கிடைத்த செய்தி இதுதான். நாங்கள் ஒருவர் ஒருவருக்கு நிறைய உதவி செய்தோம். ஒருவர் ஒருவரை தாங்கிக் கொண்டோம். அந்த சேவை மனப்பான்மை தொடர்ந்து எங்கள் சமூகத்தில் இருக்க வேண்டும்.

எனவே நாங்கள் ஒவ்வொருவரும் ஒருவருக்கு ஒருவர் உதவி, ஒத்தாசையாக இருக்க வேண்டும் என இவ் புதிய வருடத்தில் ஆசித்து நிற்கின்றேன். கடவுள் நமக்கு முன் செல்கிறார் என்கின்ற உண் மையுடன் நாங்கள் புதிய ஆண்டை எதிர் கொள்வோம்.

உங்களுக்கு அமைதி, நீதி, நம்பிக்கை, உண்மை, அன்பு நிறைந்த நல்ல ஆண் டாக புதிய ஆண்டு அமையட்டும். உங்கள் ஒவ்வொருவருடைய குடும்பங்களும் உங்களுடைய தொழில் துறைகளும், உங்கள் பிள்ளைகளும், அவர்களின் கல்வி முயற்சிகளும் இறைவனால் இந்த ஆண்டு முழுவதும் ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என்றும் இந்த ஆண்டு முழுவ தும் மாதாவுக்கு நாங்கள் அர்ப் பணிக் கின்றோம்.

கடவுளின் தாய் உங்களோடு இருந்து உங்களை வழிநடத்துவார். மருதமடு அன் னையின் பரிந்துரை இந்த ஆண்டு முழுவதும் உங்கள் ஒவ்வொருவருடனும் இருக்கக் கடவனவாக.– என்றுள்ளது.

# 'புதுவருடம் - 2026' சிறப்பிதழ்



## சவால்களுக்கு முகம்கொடுத்து புத்திசாலித்தனமாக வெல்வோம்!

### புத்தாண்டுச் செய்தியில் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

2026 புத்தாண்டு நமது தாய்நாட்டுக்குச் சவாலான ஆண்டாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அதை நன்கு அடையாளம் கண்டு, உணர்ச்சிகளுக்கு அல்லாமல், அறிவுக்கு இடமளித்து செயல்படுவதற்கு நாம் அனைவரும் இன்றே உறுதிபூணுதல் வேண்டும். சவால்களுக்கு முகம் கொடுத்து புத்திசாலித்தனமாக அவற்றை வெல்வோம்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஷ விடுத்துள்ள புத்தாண்டுச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவரது புத்தாண்டுச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எதிர்பாராத நெருக்கடி நிலைமையின் பின்னணியில் நாம் எதிர்கொண்ட பொருளாதார, சமூக மற்றும் அரசியல் சவால்கள் புதிய பரிமாணத்துக்கு விரிவடைந்துள்ளன. இந்த சவால்களை வெல்வதற்கு வெறும் ஒருதலைப்பட்ச நடவடிக்கைகள் அல்லது திட்டங்கள் மூலம் முகங்கொடுப்பது கடினமாகும். எனவே ஒத்துழைப்பு இந்த தருணத்தில் சர்வதேச மற்றும் தேசிய மட்டத்தில் வேறு எந்த காலத்தைவிடவும் முக்கியமான அவசியம் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஏமாற்றம் மற்றும் உதவியற்ற நிலையால் துன்புறுவதால் எதையும் செய்யாமல் இருப்பதன் மூலம் நிலைமை சிறந்த திசையில் மாறாது. மாற்றத்துக்குச் செய்ய வேண்டியது, அனைவரும் எல்லோருக்காகவும் ஒன்றிணைந்து செயல்படுவதே. எனவே உடன்பட முடிந்த இடத்தில் உடன்படவும், உடன்பாட்டில் செயல்படவும் நாம் பணிவுடன் இருக்க வேண்டும்.

ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் கூறியது போல், உண்மை மற்றும் நீதி தொடர்பான விடயங்களில் பெரிய மற்றும் சிறிய பிரச்சினைகளுக்கு இடையே வேறுபாடுகள் இல்லை. ஏனெனில் மனிதர்களை நடத்துவது தொடர்பான பிரச்சினைகள் அனைத்தும் ஒரே மாதிரியானவை.

இந்த சவாலான ஆண்டில் நமது சகோதர மக்கள் எதிர்கொண்டுள்ள ஒவ்வொரு பிரச்சினையையும் ஒரே மாதிரியாகக் கருதித் தீர்வுகளை கண்டறிவதற்காக நாம் செயல்பட வேண்டும்.

அத்தகைய தொலைநோக்குப் பார்வை மற்றும் முன்னோக்குச் சிந்தனையுடன் செயற்பட அனைத்து மத தலைவர்கள், அரசியல், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் நாட்டின் முழு மக்களுக்கும் தைரியமும் சக்தியும் கிடைக்கும் புத்தாண்டு பிறக்கும் இந்த நாளில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.- என்றுள்ளது.

# ‘புதுவருடம் – 2026’ சிறப்பிதழ்



## அரசும், அதிகாரிகளும், மக்களும் ஒருமித்து ஓரணியில் திரண்டால் வளர்ச்சியடையலாம்!

**வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் புத்தாண்டுச் செய்தியில் தெரிவிப்பு**

அரசும், அதிகாரிகளும், மக்களும் ஒருமித்து ஓரணியில் திரண்டால், எமது வடக்கு மாகாணம் முன்னுதாரணமான வளர்ச்சிப் பாதையில் பயணிக்கும். பிறக்கின்ற 2026, மாற்றங்களுக்கான ஆண்டாக மட்டுமல்ல, ஏற்றங்களுக்கான ஆண்டாகவும் அமையட்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் விடுத்துள்ள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மலர்கின்ற 2026 ஆம் ஆண்டானது, வடக்கு மாகாண மக்கள் அனைவருக்கும் இருள் நீங்கி, ஒளி பிறக்கும் ஒரு நம்பிக்கை ஆண்டாக அமைய எனது உளமார்ந்த புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கடந்த காலங்களில் இயற்கைப் பேரிடரால் நாம் இழந்தவை ஏராளம். ஆனால், ‘பாதிக்கப்பட்ட வாழ்க்கையைத் பழைய நிலைக்குத் திருப்புவது மட்டும் எமது இலக்கல்ல. அது முன்னரை விடப் பல மடங்கு சிறந்ததாக, வளமானதாக மாற வேண்டும்’ என்பதே எமது புத்தாண்டின் தாரக மந்திரமாகும். இடிந்து போன சுவர்களை மட்டுமல்ல, மக்களின் உடைந்த மனங்களையும் நம்பிக்கையால் கட்டி எழுப்புவோம். நாம் இழந்ததை விட, இனி அடையப்போகும் உயரம் பெரிதாக இருக்க வேண்டும்.

இந்த இலக்கை அடைவதற்கு, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசு எமக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கி வருகின்றது.

கடந்த 2025 ஆம் ஆண்டில் மாகாணத்தின் மீளெழுச்சிக்கு அரசு வழங்கிய ஆதரவுக்கு நன்றிகளைத் தெரிவிப்பதுடன், அரசின் கரங்களைப் பற்றி, எமது மக்களின் வாழ்வாதாரத்தை இந்த ஆண்டில் புதிய தளத்துக்குக் கொண்டு செல்வோம்.

நிர்வாக ரீதியாகப் புதியதோர் ஆண்டைத் தொடங்கும் இவ்வேளையில், எமது அரச அதிகாரிகளுக்கு ஓர் அன்பான வேண்டுகோள் விடுக்கிறேன்.

‘உங்கள் மேசையில் தேங்கிக் கிடக்கும் ஒவ்வொரு கோப்பும் வெறும் காகிதக் கட்டுகள் அல்ல. ஒவ்வொன்றும் ஒரு ஏழைத் தாயின் கண்ணீர், ஒரு தந்தையின் பெருமூச்சு, ஒரு இளைஞனின் எதிர்காலம் என்பதை மறவாதீர்கள். நீங்கள் புத்தாண்டில் எடுக்கும் உறுதியுரை வெறும் சடங்கல்ல. அது மக்களின் நம்பிக்கைக்குச் செய்யும் சத்தியம். சட்டதிட்டங்களுக்குள் மனிதாபிமானத்தைப் புகுத்தி, அந்த மக்களின் கண்ணீரைத் துடைக்கும் கரங்களாக நீங்கள் மாற வேண்டும்.’

அரசும், அதிகாரிகளும், மக்களும் ஓரணியில் திரண்டால், எமது வடக்கு மாகாணம் முன்னுதாரணமான வளர்ச்சிப் பாதையில் பயணிக்கும். பிறக்கின்ற 2026, மாற்றங்களுக்கான ஆண்டாக மட்டுமல்ல, ஏற்றங்களுக்கான ஆண்டாகவும் அமைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். – என்றுள்ளது.

# 'புதுவருடம் - 2026' சிறப்பிதழ்



# அனைவரும் வாழ்வில் வெற்றிபெற நிறைவான ஆண்டாக மலரட்டும்!

### நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் புத்தாண்டு வாழ்த்து

அனைவரது வாழ்விலும் வெற்றி, வளம், அமைதி, நின்மதி, மனநிறைவு நிரம்பியதாக மலர இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

பிறந்திருக்கும் 2026 பராபவ புது வருடத்தை முன்னிட்டு, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் இலங்கை நாட்டு மக்கள் அனைவருக்கும் தனது உளமார்ந்த இனிய ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.


அவர் வெளியிட்டுள்ள புது வருட வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அனைவரினது வாழ்விலும் வெற்றி, வளம், அமைதி, நிம்மதி, மனநிறைவு நிரம்பியதாக மலரட்டும். இந்த புத்தாண்டில் நீங்கள் நினைத்த எல்லா காரியங்களும் நிறைவேறி, உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு பக்கமும் அழகாக ஒளிர வேண்டும்.

பிறந்திருக்கும் இந்த 2026 பராபவ புதிய ஆண்டில், நீங்கள் நினைத்த அனைத்து காரியங்களும் நிறைவேற வேண்டும் என்பதுடன், உங்கள் ஒவ்வொருவரதும் இலட்சியங்களை அடைய புதிய முயற்சிகளுடன் தொடர்ந்து பயணிக்க எனது மனமார்ந்த வாழ்த்துகள்.

இலங்கை நாட்டு மக்கள் அனைவருக்கும் துன்பங்கள் நீங்கி, இன்பம் நிரம்பிய, நலனும் அமைதியும் நிறைந்த ஆண்டாக இந்த புதிய ஆண்டு அமைய இறைவனை பிரார்த்திப்போமாக.- என்றுள்ளது.

# 'புதுவருடம் – 2026' சிறப்பிதழ்



## புத்தாண்டை உரிமைக்காகப் போராடும் ஆண்டாக ஓர் இனமாக ஒன்றிணைந்தது முன்னெடுப்போம்!

**புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தமிழரசுக் கட்சியின் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம்**

2026 ஆம் ஆண்டு அரசியல் ரீதியாக உரிமைக்காக போராடும் ஆண்டாகவே இருக்கும். அதனை ஓர் இனமாக ஒன்றிணைந்தது முன்னெடுப்போம்.

இவ்வாறு இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும் வட மாகாண அவைத் தலைவருமான சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

புதுவருடத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவரது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எமது அன்பான உறவுகள் அனைவருக்கும் இன்று பிறக்கும் 2026 ஆம் ஆண்டுக்கான எமது புத்தாண்டு நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்றுடன் கடந்து சென்ற 2025 ஆம் ஆண்டு பல வகையில் ஏமாற்றம் அளித்த ஆண்டாக மட்டுமன்றி மிகப்பெரிய அனர்த்தத்தின் மூலம் பாரிய உயிர் இழப்புகளையும், இடப்பெயர்வுகளையும் சொத்து அழிவுகளையும் ஏற்படுத்தி விட்டு சென்றுள்ளது.

நாடு முழுவதும் இந்த டித்வா புயல் பாதிப்புகளை ஏற்படுத்தினாலும் இன மத வேறுபாடின்றிக் கூடுதலாக பாதிகபட்டவர்கள் மலையக உறவுகளே.

அவர்கள் அனைவரும் தமது தாயகத்தில் மீண்டும் நில உரிமையோடும், குடியிருப்பு உரிமையோடும் வாழ்வாதார வசதிகள் அனைத்துடனும் மீண்டு உயர்ந்திடப் பிரார்த்திக்கிறோம்.

அதேநேரம் தவறான நட்புகளால் தடம் மாறிப் போதைப் பொருள் பாவனைக்கு பழக்கப்பட்ட எமது இளம் சந்ததியினர் அதில் இருந்து விடுபட்டு தமிழ் தேசிய இனத்தின் பெருமைக்கு உரியவராக மாற வேண்டும். இவர்களை நல்வழிப்படுத்தும் பணியை ஏனைய இளையோரும் முன்னெடுக்க வேண்டும் எனவும் பிரர்த்திக்கிறேன்.

5000 ஆண்டுகளுக்கு மேலான மொழி மற்றும் கலாசார வரலாற்றுப் பெருமை உடையவர்கள் என்ற இறுமாப்பைச் சுமப்பவர்களாக எமது இளைய சமுதாயம் மிளிர வேண்டும்.

2026 ஆம் ஆண்டு அரசியல் ரீதியாக உரிமைக்காக போராடும் ஆண்டாகவே இருக்கும். அதனை ஓர் இனமாக ஒன்றிணைந்தது முன்னெடுப்போம்.

நல்லதே நடக்க பிரார்த்தித்து இந்த புத்தாண்டு எல்லோருக்கும் எல்லா சிறப்பும், செழிப்பும் தருவதாக அமைய வாழ்த்துகிறேன்.– என்றுள்ளது.

# ‘புதுவருடம் - 2026’ சிறப்பிதழ்



## எமது மக்கள் சந்தோஷமான வாழ்வைத் தொடர இந்த ஆண்டு மிகச் சிறப்பாக அமைய வேண்டும்!

### செல்வம் எம்.பி. புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவிப்பு

அரசியல் ரீதியான அடக்கு முறைகளை சந்தித்துள்ள நிலையில் பிறந்துள்ள புதிய ஆண்டு மக்களுக்கு நன்மையை தரக்கூடிய ஆண்டாக அமைய வேண்டும். இந்த ஆண்டு எமது மக்கள் சந்தோசமாக வாழ்வைத் தொடர மிகச் சிறந்த ஆண்டாக அமைய வேண்டும்.

இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

புத்தாண்டை முன்னிட்டு அவர் விடுத்துள்ள புத்தாண்டு செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பிறந்துள்ள புதிய வருடத்தில் எமது மக்கள் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியான துன்பங்கள் இன்றி மகிழ்ச்சியாக வாழ வேண்டும். அதற்கு ஏற்றவாறு இந்த ஆண்டு அமைய வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

எமது மக்கள் கடந்த ஆண்டில் பல்வேறு பிரச்சினைகளுக்கும் இடர்களுக்கும் முகம் கொடுத்துள்ளனர்.

பொருளாதார வீழ்ச்சி, இயற்கை அனர்த்தம் உள்ளிட்ட பிரச்சினைகளைச் சந்தித்து தற்போது மீண்டு வருகின்றனர்.

அரசியல் ரீதியான அடக்கு முறைகளையும் சந்தித்துள்ள நிலையில் பிறந்துள்ள புதிய ஆண்டு மக்களுக்கு நன்மையைத் தரக்கூடிய ஆண்டாக அமைய வேண்டும்.

எமது மக்கள் அனுபவித்து வந்த துன்பங்கள் அகன்று சந்தோஷமான வாழ்க்கையை தொடர்வதற்கான சந்தோஷமான எதிர்காலத்தை ஆரம்பிப்பதற்கான ஆண்டாக இந்த ஆண்டு அமைய வேண்டும்.

பிறந்துள்ள புதிய ஆண்டில் அனைத்து மக்களுக்கும் எனது புதுவருட வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.- என்றுள்ளது.

## ‘புதுவருடம் – 2026’ சிறப்பிதழ்



# பிறந்திருக்கும் புத்தாண்டு மக்களுக்கு சுபீட்சகரமான வாழ்வைத் தரட்டும்!

**புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் யாழ். மாநகர மேயர் மதிவதனி தெரிவிப்பு**

பிறந்திருக்கும் புத்தாண்டு மக்களுக்கு சுபீட்சகரமான வாழ்க்கையைத் தரட்டும். பெரும் இன்னல்களை எதிர்கொண்டுள்ள மக்கள் புத்தாண்டிலாவது துன்பங்களை மறந்து சுபீட்சகரமாக வாழ இறைவனைப் பிரார்த்திப்போம்.

இவ்வாறு யாழ். மாநகர சபை மேயர் மதிவதனி விவேகானந்தராசா விடுத்துள்ள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவரது புத்தாண்டுச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டில் ஏற்பட்ட பேரனர்த்தம் எமது மக்களைச் சொல்லொணாத் துயரங்களுக்கு ஆளாக்கியுள்ளது. உயிர்கள், உடமைகளை இழந்து எமது மக்கள் பெரும் துன்பங்களை எதிர்கொண்டுள்ளனர். பொருளாதார ரீதியில் எமது மக்கள் பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர். தமது வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதையே மக்கள் நோக்காகக் கொண்டுள்ளனர்.

மக்கள் இந்தத் துன்பத்தில் இருந்து மீண்டெள வேண்டும் என்றும் எமது எதிர்காலம் எமது கைகளிலேயே உள்ளது என்ற நம்பிக்கையிலும் தங்கள் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பி அனைவரும் மனநிறைவோடு வாழ வேண்டும். இந்த நிலையில் இன்று பிறந்துள்ள புத்தாண்டு எமது மக்களுக்கு நிறைவான ஆண்டாக அமையவேண்டும்.

மக்களது வாழ்வும் வளமும் சிறக்க இந்தப் புத்தாண்டில் இறைவனை வேண்டிப் பிரார்த்தித்து வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.– என்றுள்ளது.

## ‘புதுவருடம் - 2026’ சிறப்பிதழ்



# மலர்ந்திருக்கும் இந்தப் புத்தாண்டு மக்களுக்கு சுபீட்சத்தைத் தரட்டும்!

**யாழ். மாநகர பிரதி மேயர் தயாளன் புத்தாண்டுச் செய்தியில் தெரிவிப்பு**

மலர்ந்திருக்கும் இந்தப் புத்தாண்டு மக்களது வாழ்வில் சுபீட்சத்தை அள்ளித் தரட்டும். இப்புத்தாண்டில் மக்கள் வாழ்வு அனைத்திலும் வளம்பெறவும் உயர்வு பெறவும் இறை அருளை வேண்டி நிற்கிறேன். மலர்ந்திருக்கும் இந்தப் புத்தாண்டை நாங்கள் மகிழ்ச்சியுடனும் உற்சாகத்துடனும் கொண்டாடுவோம். எத்தனையோ துன்பங்களை அனுபவித்துள்ள எமது மக்களுக்கு இந்தப் புத்தாண்டாவது சுபீட்சத்தைத் தரவேண்டி ஆண்டவரை மன்றாடுவோம்.

இவ்வாறு யாழ். மாநகர சபையின் பிரதி மேயர் இம்மானுவல் தயாளன் புத்தாண்டுச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவரது புத்தாண்டுச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த வருடம் மக்களுக்கு சொல்லொணாத் துன்பங்கள் ஏற்பட்டன. இந்தக் கவலைகள், துன்பங்கள் எல்லாம் இந்தப் புதுவருடப் பிறப்புடன் முடிவுக்கு வந்து மகிழ்ச்சி, அமைதி, ஆரோக்கியம் மக்களது வாழ்வில் கிடைக்கட்டும்.

புதிய புத்தாண்டை வரவேற்கும் இந்த நன்னாளில், அனைத்து மக்களுக்கும் எங்கள் மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறோம். இந்த புத்தாண்டு, நாட்டிலும் சமூகத்திலும் அமைதி, ஒற்றுமை, நலன் மற்றும் வளர்ச்சியை கொண்டு வருவதாக அமையட்டும்.

பொதுமக்களின் வாழ்க்கையில் நல்ல ஆரோக்கியம், கல்வி முன்னேற்றம், பொருளாதார நிலைத்தன்மை மற்றும் மகிழ்ச்சியான வாழ்வு நிலை பெற இந்த ஆண்டு உதவியாக இருக்கட்டும்.

நம் அனைவரின் கூட்டு முயற்சியால் ஒரு சிறந்த சமூகமும், ஒரு வளமான நாடும் உருவாக இந்த புத்தாண்டு புதிய தொடக்கமாக அமைய வேண்டும் என்று மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவிக்கிறோம்.– என்றுள்ளது.

# ‘புதுவருடம் – 2026’ சிறப்பிதழ்




## தமிழ் அரசியல் கைதிகளது விடுதலை காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு தீர்வு!

**புத்தாண்டில் கிடைக்க வேண்டும் என்று மன்னார் நகர பிதா டானியல் வசந்தன் தெரிவிப்பு**

பிறந்துள்ள புத்தாண்டில் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு தீர்வு கிடைக்க வேண்டும் என இந்த நாளில் பிரார்த்திப்போம் என்று மன்னார் நகர பிதா டானியல் வசந்தன் தெரிவித்துள்ளார்.

புது வருட பிறப்பை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஊழல் அற்ற தூய்மையான அரசாட்சி ஊடாக அனைத்து மக்களுக்கும் சமனான வாய்ப்பு பிறந்திருக்கும் புத்தாண்டில் கிடைக்க வேண்டும்.

பிறந்துள்ள புது வருடத்தில் தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு தீர்வு கிடைக்க வேண்டும்.

மேலும் மாகாண சபை தேர்தலை நடத்தி அதன் ஊடாக குறைந்தபட்ச உரிமையாவது எமது மக்களுக்கு கிடைக்க வேண்டும் என இந்த அரசை நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அனைத்து மக்களுக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.– என்றுள்ளது.

# ‘புதுவருடம் - 2026’ சிறப்பிதழ்



## எல்லோர்க்கும் நல்லாண்டாய் இருபத்தியாறே வா...!

வெள்ளத்தின் வேதனை போக்கிடவே வா
பள்ளத்தில் வீழ்ந்தோரை எண்ணியே வா
உள்ளத்தால் உடைந்தோர்க்கு உயர் மருந்தாய் வா
எல்லோர்க்கும் நல்லாண்டாய் இருபத்தி யாறேவா

மண்ணுக்குள் புதையுண்டு மாண்டோரை நினைக்கும்
மனவருத்தம் போக்கிடவே புத்தாண்டே வா
மழையாலே அள்ளுண்டு வீடிழந்து நிற்பாரின்
மனவருத்தம் போக்கிடவே புத்தாண்டே வா

கும்பிட்ட கோவிலெங்கும் குளமாகி நிற்கையிலே
நம்பிக்கை இழக்காமல் நாடினார் இறையிடமே
இறைதூதர் வடிவிலே எங்கிருந்தோ வந்து
உதவினார் குணம்போற்ற ஓடிவா புத்தாண்டே

விளம்பரம் தோடாமல் விரைந்தோடி வந்து
வீழ்ந்திருப்பார் இடம்பார்த்து தேவையை அறிந்து
உளமுவக்க உவந்திட்டார் உச்சிதொட்டு வாழ்த்துதற்கு
புத்தாண்டே நீயும் புறப்பட்டு வந்துவிடு!

போரிடும் எண்ணம் புதைந்து விட வேண்டும்
யாரிடமும் பகைமை கொள்ளாமை வேண்டும்
சமத்துவமும் நீதியும் நிறைந்திடவே செய்யும்
சாதுர்யம் மிக்க புத்தாண்டாய் மலர்க...

இருபத்து ஆறு எல்லோர்க்கும் நல்லதை
ஈய்கின்ற ஆண்டாக இருந்திடவே வேண்டும்
இன்னல் அகன்று எல்லோரும் நலமாய்
இருக்கின்ற ஆண்டாக இறைவாநீ ஆக்கிடுவாய்!

நலமோங்க வேண்டும் வளமோங்க வேண்டும்
நிலமீது யாவருக்கும் நிம்மதியே வேண்டும்
அளவில்லா அருளுடைய ஆண்டவனே நீயும்
அனைவர்க்கும் அருந்துணையாய் அமைந்துவிடு நாளும்!

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,**
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்,
மெல்பேர்ன், ஆஸ்திரேலியா.

# 'புதுவருடம் - 2026' சிறப்பிதழ்



## மக்களுக்குச் சம உரிமை, சம அந்தஸ்தை வழங்கும் ஆண்டாகப் புத்தாண்டு அமையட்டும்

### இ. தொ. கா. ராமேஸ்வரன் புத்தாண்டுச் செய்தியில் தெரிவிப்பு

நாடு சுபீட்சமான எதிர்காலத்தை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் இந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் சொல்லென்னா துயரத்துக்கு எம்மை இட்டுச் சென்றுள்ளது.

இந்த நிலையில் அனைத்து துயரங்களும் நீங்கி பிறக்கும் புத்தாண்டு இலங்கை மக்களுக்கு சம உரிமையையும் சம அந்தஸ்தையும் வழங்கி நாட்டு மக்கள் அனைவருக்கும் சிறந்த வாழ்க்கை சூழலை ஏற்படுத்தும் ஆண்டாக அமைய வேண்டும்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தவிசாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரன் விடுத்துள்ள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அண்மையில் இயற்கை அனர்த்தம் ஏற்பட்டபோது நாட்டின் பல பகுதிகளிலும் மக்கள் பாதிப்பை எதிர்நோக்கியிருந்தார்கள். குறிப்பாக மலையக மக்கள் பல பிரதேசங்களில் வீடு வாசல், சொத்து சுகங்களை இழந்து சிரமங்களை மேற்கொண்டிருந்தார்கள். மாணவர்களின் கல்வியும் பாதிக்கப்பட்டிருந்தது.

அவர்களுக்கான நிவாரணங்களை முடிந்தளவு வழங்கியிருந்தோம். எமது மக்களுக்கு காணி, வீட்டு உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளோம். இந்திய அரசாங்கத்தின் வீடமைப்புத் திட் டத்தை துரிதமாக மேற்கொள்ளவும் வலியுறுத்தி வருகிறோம்.

இந்நிலையில் உழைக்கும் வர்க்கமாகிய தோட்ட தொழிலாளர்கள் இந்த நாட்டின் பொருளாதாரத்துக்கு முதுகெலும்பாக இருந்து வருகின்றார்கள். எந்தவொரு கால கட்டத்திலும் இந்த நாட்டுக்கு உழைப்பாளிகளாக இருந்திருக்கின்றார்களே தவிர இந்த நாட்டுக்கு எந்தவிதமான பாதகத்தையும் ஏற்படுத்தியதில்லை. இவர்கள் இதுவரையிலும் அனைத்து உரிமைகளையும் பேரம் பேசும் சக்திகளால்தான் பெற்றிருக்கின்றார்கள்.

எனவே இந்தப் புதிய வருடத்தில் சகல உரிமைகளுடனும் வாழ்வதற்கும், அதேபோல் மக்கள் வாழ்க்கையில் இவர்களின் நியாயமான கோரிக்கைகளை அனைவரும் நிறைவேற்றுவதற்கு ஒன்றிணைந்து உழைப்போம்.

நமது பலம், ஒற்றுமை என்பவற்றை நிலை நிறுத்தி நாம் தலை நிமிர்ந்து ஏனையோருக்கு நிகராக வீறுநடைபோட பிறக்கும் புத்தாண்டில் உறுதி கொள்வோம்.- என்றுள்ளது.

# ‘புதுவருடம் – 2026’ சிறப்பிதழ்



## தமிழரின் புதிய பயணம் புதிய ஆண்டில்!

புத்தாண்டு என்பது தினத்தாளில் ஏற்படும் மாற்றம் மட்டும் அல்ல. அது மனித மனதில் பிறக்கும் புதிய நம்பிக்கையின் தொடக்கம். பல துன்பங்களையும் சோதனைகளையும் எதிர்கொண்ட இலங்கைத் தமிழருக்கு, ஒவ்வொரு புத்தாண்டும் எதிர்காலத்தை புதிதாக வடிவமைக்கும் ஒரு வாய்ப்பாக அமைகிறது.

கடந்த காலங்களில் யுத்தத்தின் வலி, இடம்பெயர்வு, பொருளாதார சிரமங்கள், அரசியல் நிலையற்ற தன்மை போன்ற பல சவால்களை இலங்கைத் தமிழ்சமூகம் எதிர்கொண்டது.

இருப்பினும், கல்வி, பண்பாடு, மொழி, அடையாளம் ஆகியவற்றை தக்கவைத்துக் கொண்டு, மீண்டும் எழும் ஆற்றலை தமிழ்சமூகம் நிரூபித்துள்ளது.

இன்றைய நிலையில், இளைஞர்களின் கல்வி முன்னேற்றம், வெளிநாட்டு வேலைவாய்ப்புகள், தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவை புதிய வாய்ப்புகளைத் திறந்து வைத்துள்ளன. அதே சமயம், நாட்டுக்குள் வாழும் மக்களின் அன்றாட வாழ்க்கையில் விலைவாசி உயர்வு, வேலைவாய்ப்பு குறைவு, சமூக பாதுகாப்பு போன்ற பிரச்சினைகள் தொடர்ந்தே உள்ளன. இவற்றை எதிர்கொள்ள ஒன்றுபட்ட சிந்தனையும் சமூக பொறுப்பும் அவசியமாகிறது.

புத்தாண்டு நமக்கு நினைவூட்டுவது ஒன்று தான். எதிர்காலம் நம்மிடமே உள்ளது. இன ஒற்றுமை, மொழி மரியாதை, மனித உரிமைகள், சமத்துவம் ஆகியவற்றை மையமாகக் கொண்டு நாம் பயணிக்க வேண்டும்.

தனிநபர் வளர்ச்சியுடன் சேர்ந்து, சமூக வளர்ச்சிக்கும் பங்களிப்பு அளிப்பதே இன்றைய தேவை.

இந்த புதிய ஆண்டில், இலங்கைத் தமிழர் அனைவரும் கடந்த வலிகளை பாடமாக மாற்றி, நம்பிக்கையுடன் முன்னேறும் ஒரு புதிய பாதையைத் தேர்ந்தெடுப்போம். அமைதி, நீதி, வழமை நிறைந்த நாளைய இலங்கை தமிழ் சமூகத்தைக் கட்டியெழுப்புவோம்.

புதிய ஆண்டு இலங்கைத் தமிழர் அனைவருக்கும் தைரியம், நம்பிக்கை மற்றும் நல்ல நாள்களை கொண்டு வரட்டும்.

புத்தாண்டு என்பது புதிய நம்பிக்கைகளுக்கும் புதிய பாதைகளுக்கும் கதவைத் திறக்கும் காலம். கல்வி எப்போதும் நமது எதிர்காலத்தின் அடையாளமாக இருந்து வருகிறது. யுத்தம், இடம்பெயர்வு, பொருளாதார நெருக்கடி போன்ற சவால்களுக்கிடையிலும், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பும் மாணவர்களின் விடாமுயற்சியும் கல்வியைஉயிர்ப்புடன்வைத்திருக்கின்றன. இன்று கல்வி என்பது பரீட்சை மதிப்பெண்களுக்குள் மட்டுப்படாமல், தொழில்நுட்ப அறிவு, மொழித் திறன், சிந்தனை ஆற்றல், ஒழுக்கம் மற்றும் சமூக பொறுப்பு ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டியது அவசியம்.

கிராமப்புற மற்றும் வசதி குறைந்த பகுதிகளில் கல்வி வாய்ப்புகளை மேம்படுத்துவது சமூகத்தின் பொறுப்பாகும். பெற்றோர், ஆசிரியர்கள், பழைய மாணவர் சங்கங்கள் மற்றும் சமூக அமைப்புகள் ஒன்றிணைந்து செயற்பட்டால், கல்வி உண்மையான மாற்றத்தை உருவாக்கும்.

இந்த புதிய ஆண்டில், கல்வியை தனிநபர் முன்னேற்றத்துக்கான கருவியாக மட்டுமல்லாமல், இலங்கைத் தமிழ் சமூகத்தின் வளர்ச்சிக்கும் நிலைத்த எதிர்காலத்துக்குமான அடித்தளமாகக் காண்போம். புதிய ஆண்டு கல்வி வளர்ச்சியின் ஆண்டாக அமையட்டும்.

**வித்தகர் விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா,**
காரைதீவு நிருபர்.

# சூதாட்ட விடுதி வரிகளில் இன்று முதல் திருத்தம்



இன்று முதல் அமுலுக்கு வரும் வகையில், இலங்கையில் சூதாட்ட விடுதிகள் மற்றும் பந்தய வியாபாரங்களுக்கான வரிகளில் அதிரடி மாற்றங்களை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.

2025 ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பந்தயம் மற்றும் சூதாட்ட வரி (திருத்தச்) சட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களுக்கு அமைவாக, இந்த புதிய வரி அறவீடுகள் இன்று முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

அதன்படி, சூதாட்ட விடுதிகளுக்குள் நுழைவதற்கான நுழைவுக் கட்டணம் இதுவரை 50 அமெரிக்க டொலர்களாக காணப்பட்ட நிலையில், அது தற்போது 100 அமெரிக்க டொலர்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கைப் பிரஜைகள் எவரேனும் சூதாட்ட விடுதிக்குள் நுழையும் போது, குறித்த நிறுவனத்தினர் தலா 100 டொலர் அல்லது அதற்கு சமமான வெளிநாட்டு நாணயம் அல்லது இலங்கை ரூபாயை நுழைவுக் கட்டணமாக அறவிட வேண்டும்.

பந்தயம் மற்றும் சூதாட்ட வியாபாரங்களில் ஈடுபடும் நிறுவனங்கள் செலுத்தி வந்த 15 சதவீத வரி, தற்போது 18 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும், மாதாந்தம் ஒரு மில்லியன் ரூபாய்க்கும் அதிகமான மொத்த வருமானத்தை ஈட்டும் பந்தய முகவர்கள் மற்றும் சூதாட்ட நிறுவனங்களுக்கு இந்த புதிய 18 சதவீத வரி வீதம் பொருந்தும்.

இந்த புதிய வரி முறைமைக்கு அமைவாக செயற்படுமாறு அனைத்து சூதாட்ட விடுதி உரிமையாளர்களுக்கும், பந்தய வியாபார நிறுவனங்களுக்கும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

# உணவு பணவீக்கத்தில் சிறியளவு அதிகரிப்பு



இலங்கையின் பணவீக்கம் தொடர்பான சமீபத்திய தரவுகளைத் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

இதன்படி, உணவு பணவீக்கத்தில் மாத்திரம் சிறியளவு அதிகரிப்பு பதிவாகியுள்ளது.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின்படி, 2025 டிசம்பர் மாதத்தில் ஒட்டுமொத்த பணவீக்க விகிதம் 2.1 வீதமாக மாற்றமின்றி காணப்படுகிறது.

நவம்பர்மாதத்தில் 1.7 வீதமாக காணப்பட்ட உணவு பணவீக்கம், டிசம்பர் மாதத்தில் 1.8 வீதமாக சிறியளவு அதிகரிப்பைக் காட்டியுள்ளது.

அத்துடன், நவம்பர் மாதத்தில் 3 வீதமாக காணப்பட்ட உணவுப் பணவீக்கம், டிசம்பர் மாதத்திலும் மாற்றமின்றி அதே நிலையில் நீடிக்கிறது.

பொருளாதாரத்தின் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் ஒட்டுமொத்த பணவீக்கம் சீராகப் பேணப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மோசமடையும் காற்றின் தரம் மார்ச் வரை நீடிக்க வாய்ப்பு



இலங்கையின் வான்பரப்பில் காற்றின் தரம் தொடர்ந்து ஆரோக்கியமற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் எச்சரிக்கை விடுத்துள்ளது

இந்தியாவின் திசையிலிருந்து வரும் மாசடைந்த காற்று மற்றும் உள்நாட்டு வளிமண்டல நிலைமைகளால் இந்த அபாயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களாக யாழ்ப்பாணம், சிலாபம், புத்தளம், காலி, கண்டி மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களில் காற்றின் தரம் கணிசமான அளவு வீழ்ச்சியடைந்துள்ளது.

குறிப்பாக வடமாகாணத்தின் சில பகுதிகளில் சுவாசத்திற்கு ஒவ்வாத நச்சுத்தன்மை கொண்ட நுண்துகள்கள் காற்றில் கலந்துள்ளதாக அண்மைக் கால தரவுகள் காட்டுகின்றன.

இது குறித்த ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர், "இந்தியாவில் நிலவும் கடும் காற்று மாசுபாடு காரணமாக, அங்கிருந்து மாசடைந்த காற்று இலங்கையை நோக்கி நகர்கிறது.

அதனுடன் உள்நாட்டு புகை மாசும் இணைந்துகொண்டுள்ளது. தற்போதைய வளிமண்டல அழுத்த நிலைமைகள் காரணமாக, இந்த மாசுக்கள் வெளியேற முடியாமல் வளிமண்டலத்தின் கீழ்ப்பகுதியிலேயே தங்கியுள்ளன." எனத் தெரிவித்தார்.

இந்த நிலைமை எதிர்வரும் 2026 மார்ச் மாதம் வரை நீடிக்கக்கூடும் என்றும் தட்பவெப்ப மாற்றங்களுக்கு ஏற்ப அவ்வப்போது நிலைமையில் முன்னேற்றம் ஏற்படலாம் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# பாரிய ஊழல், மோசடிகளை மூடிமறைப்பதற்குத் திட்டம்

## நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு



இலங்கையின் கணக்காய்வாளர் நாயகம் பதவி கடந்த 8 மாதங்களாக வெற்றிடமாக வைக்கப்பட்டுள்ளமை, அரசாங்கத்தின் பாரிய ஊழல் மற்றும் மோசடிகளை மூடிமறைப்பதற்கான ஒரு திட்டமிட்ட நடவடிக்கையே என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த பதவிக்குத் தனது நெருக்கமான ஒருவரை நியமிக்க ஜனாதிபதி மேற்கொண்ட முயற்சி, அரசமைப்பு சபையினால் தடுத்து நிறுத்தப்பட்டதாக நாமல் ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

நேர்மையான முறையில் செயற்படும் ஒருவர் இந்த பதவியில் இருப்பது, அரசாங்கத்தின் மோசடியான கொடுக்கல் வாங்கல்களுக்குத் தடையாக அமையும் என்பதால், தமக்கு இணக்கமான ஒருவரை இந்தப் பதவிக்கு கொண்டுவர அரசாங்கத்தின் பலம் வாய்ந்த தரப்பினர் முயற்சிப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

சட்டவிரோதமான முறையில் 'டபிள் கேப்' வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான டெண்டர் கோரல்கள், துறைமுகத்தில் இருந்து சட்டவிரோதமாக 323 கொள்கலன்களை வெளியேற்றியமை மற்றும் தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்தமை போன்ற பாரிய ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு எதிராக நேரடியாக செயல்படும் ஒரு கணக்காய்வாளர் நாயகம் இருப்பது அரசாங்கத்திற்கு தடையாக இருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கணக்காய்வாளர் நாயகம் ஒருவரை நியமிக்காது அரசாங்கம் முன்னெடுக்கும் இந்தச் செயற்பாடு, நாட்டுக்குக் கிடைக்கும் சர்வதேச நிதி உதவிகளைப் பாதிக்கும் என நாமல் ராஜபக்ஷ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

முறையான நிதி செயல்பாடு இன்றி சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற நிறுவனங்கள் இலங்கைக்குக் கடன் வழங்க முன்வராது என்பதையும், இது நாட்டின் பொருளாதார நிலைமையை மேலும் ஆபத்துக்குள்ளாக்கும் என்பதையும் அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

# வவுனியா – சமளங்குளம் மக்கள் குழப்பப்பட்டுள்ளனர்: ஆபத்தை உணர்ந்தாலே மண்ணை காப்பாற்ற முடியும்!

## தமிழ் தேசிய மக்கள் முன்னனி தெரிவிப்பு

(கி.வசந்தன்)

வவுனியா, சமளங்குளம் கல்லுமலை விநாயகர் ஆலய நிர்வாகம் உட்பட மக்கள் தொல்பொருள் திணைக்கள–த்தால் குழப்பப்பட்டுள்ளனர். எனவே எதிர்கால ஆபத்தை மக்கள் உணர வேண்டும் என்று தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் எஸ்.தவபாலன் தெரிவித்துள்ளார்.

அந்தொ பகுதிக்கு விஜயம் செய்த பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

வவுனியா, சமளங்கும் கல்லுமலை பிள்ளையார் ஆலயத்திற்கு சென்றிருந்தோம். அங்கு தொல்லியல் எச்சங்களை பாதுகாக்கிறோம் என்ற போர்வையிலே பௌத்த விகாரை ஒன்றை அமைப்பதற்கான அடித்தளம் இடப்பட்டுக்கொண்டிருக்கிறது.

தொல்லியல் திணைக்களம் மக்களைக்குழப்பிவைத்துள்ளது. எனவேநாங்கள் இது தொடர்பாக சில விடயங்களை தெளிவுபடுத்தியிருந்தோம். குருந்தூர்




மலையிலும் ஆரம்பத்தில் இப்படியான ஒரு கட்டுமானமே முன்னெடுக்கப்பட்டது. தற்போது அங்கு விகாரை அமைக்கப்பட்டுள்ளமை யாவரும் அறிந்த விடயம்.

கல்லுமலையில் ஒரு பிள்ளையார் ஆலயம் உள்ளது. அதனை திருத்துவதற்கு உதவி செய்கிறோம். ஆலயத்தை தொடர்ந்துநீங்கள்கட்டலாம்என்றசலுகைகளைகூறிவிகாரையைகட்டும்முயற்சியே எதிர்காலத்தில் இடம்பெறும். இது தொடர்பாக மக்களுக்கு சொல்லியிருந்தோம்.

ஆலய நிர்வாகம் உட்பட்ட அந்த மக்கள் குழப்பப்பட்டுள்ளனர். இது மிகுந்த கவலையை தருகின்றது. இந்த ஆபத்தினை மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். குறிப்பாக சமளங்குளம் மக்களும் ஆலய நிர்வாகமும் இதனை விளங்கிக்கொள்ள வேண்டும்.

இன்று அவர்கள் சொல்லும் வாக்குறுதி உங்களை சமாளிப்பதற்கு மட்டுமே. தமிழர் பகுதியில் விகாரையாக எழுந்து நிற்கின்ற இடங்களில் எல்லாம் பல்வேறு வாக்குறுதிகள் சொல்லப்பட்டன. ஒரு சிலர் ஜேவிபியின் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்காகவும், அடிப்படை நலன்களுக்காகவும் மக்களை குழப்பியுள்ளனர். இதன் மூலம் எதிர்காலத்தில் உங்கள் நிலங்கள் பறிக்கப்படும். ஜீவனோபாயம் அழிக்கப்படும்.

அங்கு சென்ற அரச இயந்திரம் மக்களை திருப்திப்படுத்துவதற்கான சில செய்திகளை சொல்லியிருப்பதாகச் சிந்திக்கிறோம். இந்த ஆபத்தை உணராத வரையில் சமளங்குளம் மண்ணை காப்பாற்ற முடியாது.

எனவே, தொடர்ச்சியாக எதிர்வினையாற்றுகின்ற செயற்பாடுகளை தமிழ்த் தேசிய தரப்புக்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்பதே எமது அவாவாக உள்ளது. – என்றார்.

# புத்தாண்டு கொண்டாட்டத்தை முன்னிட்டு கொழும்பில் விசேட போக்குவரத்து திட்டம்

## நாடுமுழுவதும் 8000 பொலிஸார் கடமையில்

“புத்தாண்டுப் பிறப்பை முன்னிட்டு நாடு தழுவிய ரீதியில் 8 ஆயிரம் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேல் மாகாணத்தில் சுமார் ஆயிரத்துக்கும் அதிக எண்ணிக்கையிலான அதிகாரிகள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளதுடன், கொழும்பு நகரில் மாத்திரம் 700 மேற்பட்ட போக்குவரத்துப் பொலிஸார் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.”

– இவ்வாறு போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் வீதிபாதுகாப்பு மாவட்டத்துக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் சேனாதீர தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெளிவுபடுத்தினார். அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில்,

“காலிமுகத்திடல்மற்றும்கொழும்பின் முக்கியபல பகுதிகளில் மாலை 6 மணி முதல் விசேட போக்குவரத்து ஒழுங்குகள் நடைமுறைப்படுத்தப்படும். வாகன நெரிசல் அதிகரிக்கும் பட்சத்தில் கொம்பனித்தெரு, கொள்ளுப்பிட்டி மற்றும் காலி முகத்திடல் வீதிகளில் ஒருவழிப் போக்குவரத்து முறைமை பின்பற்றப்படும். கனரக வாகனங்கள் கொழும்பு நகருக்குள் நுழைவது மாலை முதல் தடைசெய்யப்படும். பொதுமக்களின் வசதிக்காக காலி முகத்திடலைச் சூழவுள்ள பகுதிகளில் சுமார் 4000 வாகனங்களை நிறுத்துவதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

மெரைன் டிரைவ், போர்ட் சிட்டி மற்றும் கொள்ளுப்பிட்டி பகுதிகளில் இதற்கான தரிப்பிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. வீதியோரங்களில் வாகனங்களை நிறுத்துவதைத் தவிர்க்குமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கிறேன். இல்லையெனில் அவ்வாறு நிறுத்தப்படும் வாகனங்கள் அப்புறப்படுத்தப்படும். குறிபாக காலி முகத்திடல் வீதியின் இருமருங்கிலும் வாகனங்களை நிறுத்துவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. மீறி நிறுத்தப்படும் வாகனங்களை கொண்டு செல்வதற்கு விசேட வாகனங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்புப் பணிகளுக்காக நாடு முழுவதும் சுமார் 8 ஆயிரம் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேல் மாகாணத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட அதிகாரிகள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளதுடன், கொழும்பு நகரில் மாத்திரம் 700 க்கும் மேற்பட்ட போக்குவரத்துப் பொலிஸார் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மதுபோதையில் வாகனம் செலுத்துபவர்களைக் கண்டறிய 75 ஆயிரம் நவீன சுவாசப் பரிசோதனைக் (மதுசார பரிசோதனைக்) கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. போதைப்பொருள் பாவனையில் ஈடுபடுபவர்களைக் கண்டறிய விசேட சோதனைகள் முன்னெடுக்கப்படஉள்ளதுடன், அவ்வாறு கைதாகும் நபர்கள் சட்ட வைத்திய அதிகாரியின் முன் ஆஜர்ப்படுத்தப்படுவர்கள்.

மோட்டார் சைக்கிள்களில் வருவோர் தலைக்கவசம் அணிவது கட்டாயமாகும். அதிக சத்தமிடும் ஒலிப்பான்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறும், வாகனங்களுக்கு வெளியே தலை அல்லது கைகளை நீட்டி ஆபத்தான முறையில் பயணம் செய்ய வேண்டாம். கொண்டாட்டங்களின் போது சட்டத்தையும் ஒழுங்கையும் மதித்து, பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பொது மக்களிடம் வலியுறுத்துகிறேன்.”– என்றார்.

# சஜித் பிரேமதாஸ தலைமைத்துவத்தின் கீழ் ரணிலின் ஆலோசனையில் இணைய முடியும்

## ஹரின் பெர்னாண்டோ தெரிவிப்பு



"நாடாளுமன்றத்துக்கு வர வேண்டும் என்பதை விட, சகல எதிர்க்கட்சிகளும் இணைந்து பயணிக்க வேண்டும் என்பதிலேயே முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அக்கறை கொண்டுள்ளார். சஜித் பிரேமதாஸவின் தலைமைத்துவத்தின் கீழ் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைகளுடன் இணைந்து பயணிக்க முடியும் என்பதே எனது நிலைப்பாடாகும்."

– இவ்வாறு முன்னாள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"இந்த அரசாங்கம் ஆட்சியமைத்து ஓராண்டு நிறைவடைந்துள்ளது. காலம் மிக வேகமாகச் சென்று விடும். பல அரசாங்கங்களில் அங்கத்துவம் வகித்த அனுபவத்தின் அடிப்படையில் இதைக் கூறுகின்றேன். எனவே எதிர்க்கட்சிகளை விமர்சித்துக் கொண்டிருப்பதை விட, அரசாங்கத்தின் வேலைத் திட்டங்களை துரிதமாக நடைமுறைப்படுத்த வேண்டியதே காலத்தின் தேவையாகும்.

அரசாங்கத்திலிருக்கும் போது எதிர்க்கட்சிகளை விமர்சிப்பதும், எதிர்க்கட்சியிலிருக்கும் போது அரசாங்கத்தை விமர்சிப்பதும் குறுகிய அரசியலாகும். ஆனால் தற்போது இடம்பெற வேண்டியது அந்த அரசியல் அல்ல. அரசாங்கத்திலிருக்கும் போது அதன் வேலைத் திட்டங்கள் தொடர்பிலேயே பேசப்பட வேண்டும். முதன் முறையாக ஆட்சியமைத்துள்ளதால் இவர்களுக்கு அந்த அனுபவம் இல்லையென நினைக்கின்றேன்.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவை சந்திப்பதற்காகச் சென்ற ஐ.தே.க. சிரேஷ்ட தலைவர்கள் மூவரும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். அதற்கமைய இது தொடர்பில் எடுக்கப்படவுள்ள அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ரணில் விக்கிரமசிங்கவால் இது குறித்து ஐ.தே.க. செயற்குழுவுக்கு அறிவிக்கப்படும்.

எவ்வாறிருப்பினும் நாம் ஒன்றிணைவதற்கான வாய்ப்புக்களே அதிகமுள்ளன. ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணையும் அதேவேளை, அரசாங்கத்துக்கு எதிரான சகல கட்சிகளுடனும் இணைந்து பலம் மிக்க அரசியல் பயணத்தைத் தொடர்வோம். நாடாளுமன்றத்துக்கு வர வேண்டும் என்பதை விட, சகல எதிர்க்கட்சிகளும் இணைந்து பயணிக்க வேண்டும் என்பதிலேயே முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அக்கறை கொண்டுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் கீழ் அரசியல் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் எவ்வித சிக்கலும் இல்லை. சஜித் பிரேமதாஸவின் தலைமைத்துவத்தின் கீழ் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைகளுடன் இணைந்து பயணிக்க முடியும் என்பதே எனது நிலைப்பாடாகும். நாம் இணைந்து பயணித்தால் மாத்திரமே அரசாங்கத்துக்கு சவால் விடுக்க முடியும்."– என்றார்.

# பிறந்துள்ள 2026ஆம் ஆண்டு நாட்டிற்கு மிகவும் சவாலானது

## எஸ்.எம். மரிக்கார் தெரிவிப்பு

மக்களை ஏமாற்றி, கனவுலகில் வாழ வைத்த ஒரு வருடம் முடிவுக்கு வருவதாகவும், பிறக்கவிருக்கும் 2026ஆம் ஆண்டு நாட்டிற்கு மிகவும் சவாலான ஒன்றாக அமையப்போவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். எம். மரிக்கார் தெரிவித்தார்.

எதுல்கோட்டேயிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர், ரூபாயின் வீழ்ச்சி காரணமாக வெளிநாட்டு கடன் சுமை 703 பில்லியன் ரூபாவினால் அதிகரித்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

அனர்த்த நிலைமைகளால் சுற்றுலாத்துறை மற்றும் விவசாயத்துறை பாரிய பாதிப்புகளைச் சந்தித்துள்ளதால், ஏற்றுமதி – இறக்குமதி இடைவெளி அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும் அவர் எச்சரித்தார்.

தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்த பின்னர் இதுவரை நேரடி வெளிநாட்டு முதலீடுகள் எவையும் கிடைக்கவில்லை எனவும், 2026 இலும் அத்தகைய முதலீடுகள் வருவதற்கான அறிகுறியும் இல்லை எனவும் அவர் சாடினார்.

சர்வதேச இறையாண்மை பிணை முறி தவிர்ந்த ஏனைய அனைத்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன்களையும் செலுத்த வேண்டியுள்ள நிலையில், நாட்டின் உட்கட்டமைப்பு வசதிகளுக்கு ஏற்பட்டுள்ள 900 பில்லியன் ரூபாவிற்கும் அதிகமான சேதங்களைச் சீரமைப்பது பெரும் சவாலாகும் என அவர் சுட்டிக்காட்டினார்.



பொருளாதார நெருக்கடிகளைப் பயன்படுத்தி ஆட்சியைப் பிடிக்க ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் முயற்சிக்காது என்று கூறிய அவர், ஆனால் வெளிநாட்டு முதலீடுகளைக் கொண்டுவர முடியாத மற்றும் மக்களின் வருமானத்தை அதிகரிக்கத் தெரியாத இந்த திறமையற்ற அரசாங்கத்திற்கு எதிராக, ஒரு வலுவான வலதுசாரி பொருளாதாரக் கட்டமைப்பை உருவாக்க வேண்டிய தேவை இன்று ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இதற்காகவே ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய தேசியக் கட்சியும் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருவதாகவும், தற்போது அதன் சாதகமான அறிகுறிகள் தென்படத் தொடங்கியுள்ளதாகவும் அவர் கூறினார்.

ஊழல் குற்றச்சாட்டுகள் இல்லாத தூய்மையான நபர்களை ஒன்றிணைத்து, நாட்டை முடக்கும் இடதுசாரி சக்திகளுக்கு எதிராக ஒரு பலமான தென்னிலங்கை முகாமை உருவாக்கப்போவதாகத் தெரிவித்த மரிக்கார், ஐக்கிய தேசியக் கட்சி என்பது ஐக்கிய மக்கள் சக்தியின் தாய்க்கட்சி எனவும் அதன் பிரதான இல்லம் "சிறிகொத்த" எனவும் குறிப்பிட்டார்.

சில காரணங்களால் பிரிந்து சென்றபோதிலும் நாம் நிரந்தரமாகப் பிரிந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், இந்த இரு கட்சிகளும் இணைவதைத் தடுப்பதற்கு எவருக்கும் முடியாது என்றும் அவர் வலியுறுத்தினார்.

மக்கள் தற்போது அரசாங்கத்தின் மீது கடும் விரக்தியில் உள்ளதால் அவர்களுக்கு ஒரு புதிய நம்பிக்கை தேவைப்படுவதாகக் குறிப்பிட்ட அவர், தலைமைத்துவப் பிரச்சினைகளை முன்னிறுத்தி இந்த இணைப்பைச் சீர்குலைக்க வேண்டாம் என வேண்டுகோள் விடுத்தார்.

பெரும்பான்மை பலம் ஐக்கிய மக்கள் சக்தியிடமே உள்ள போதிலும், ரணில் விக்ரமசிங்கவின் அனுபவம் மற்றும் முதிர்ச்சியையும் ஆலோசனைகளாகப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்த அவர், இந்த புதிய அரசியல் பயணம் நாளை முதல் ஆரம்பமாகும் எனத் தனது உரையில் மேலும் தெரிவித்தார்.

# அரசாங்கத்தின் ஒரு வருட ஆட்சியில் எந்தவொரு புதிய ஆரம்பமும் இல்லை

## சஞ்சீவ எதிரிமான்ன தெரிவிப்பு



இலங்கையின் 77ஆவது சுதந்திர ஆண்டு, 76 ஆவது ஆண்டை விட எவ்விதத்தில் சிறப்பானது என்ற கேள்வி எழுவதாகவும், இந்த அரசாங்கத்தின் 77ஆவது ஆண்டு நிறைவடையும் போது நாட்டின் எந்தவொரு துறையிலும் தீர்க்கமான நேர்மறையான தலையீடுகளையோ அல்லது புதிய ஆரம்பங்களையோ ஏற்படுத்த அரசாங்கம் தவறியுள்ளதாக முன்னாள் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சஞ்சீவ எதிரிமான்ன தெரிவித்தார்.

பத்தரமுல்லவில் உள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கட்சித் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சுதந்திர இலங்கையின் 76 ஆண்டுகள் குறித்து ஜே.வி.பி மற்றும் என்.பி.பி உள்ளிட்ட திசைகாட்டி தரப்பினர் கடுமையான மற்றும் கொடூரமான விமர்சனங்களை முன்வைத்ததாகக் குறிப்பிட்ட அவர், சுதந்திர இலங்கையின் 77ஆவது ஆண்டு திசைகாட்டி அரசாங்கத்தின் கீழ் கழிந்துள்ள நிலையில், முந்தைய 76 ஆண்டுகளை விட இந்த 77ஆவது ஆண்டு எவ்விதத்தில் விசேடமானது என்பதை அரசாங்கம் தனது மனசாட்சியிடம் கேட்க வேண்டும் என வலியுறுத்தினார்.

நாட்டின் எந்தவொரு துறையிலும் தீர்மானமிக்க சாதகமான தலையீடுகளை செய்ய இந்த அரசாங்கம் தவறியுள்ளதுடன், அவர்களால் கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்பட்ட பல துறைகளிலும் புதிய பிரச்சினைகளையே உருவாக்கியுள்ளதாக அவர் குற்றம் சுமத்தினார்.

குறிப்பாக, 6ஆம் வகுப்பு ஆங்கிலப் பாடப்புத்தகத்தில் சிறுவர்களின் மனதிற்குப் பொருத்தமற்ற மற்றும் பெரியவர்கள் கூட பார்க்கக்கூடாத இணையதளம் ஒன்றிற்கான அணுகல் வழங்கப்பட்டமை போன்ற விசித்திரமான பிரச்சினையுடனேயே இந்த ஆண்டு நிறைவடைவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளத் தயாராக இருப்பதாக கல்வி அமைச்சின் செயலாளர் ஊடாக அறிவிக்கப்பட்ட போதிலும், இந்த அரசாங்கம் தம்மால் அல்லது தமக்கு கீழ் இழைக்கப்படும் தவறுகள் குறித்து நியாயமான மற்றும் ஏற்றுக்கொள்ளக் கூடிய விசாரணைகளை முன்னெடுத்த வரலாற்றை கடந்த ஆண்டில் காணவில்லை என அவர் தெரிவித்தார்.

இதற்கு உதாரணமாக, அமைச்சர் வடுகல தான் பதவியேற்ற நாளில் 17 கடவுச்சீட்டுகள் யாரோ ஒருவரால் சட்டவிரோதமாகப் பெறப்பட்டதாகக் கூறி பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய போதிலும், அவற்றைச் செய்தது யார் என்பதை நாட்டுக்கு வெளிப்படுத்தத் தவறிவிட்டார் என எதிரிமான்ன குறிப்பிட்டார்.

எனவே, தற்போதைய பிரச்சினைகள் தொடர்பில் இவ்வாறான ஏற்றுக்கொள்ள முடியாத விசாரணைகளுக்கு அப்பாற்பட்டு, நியாயமான மற்றும் சுதந்திரமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் எனத் தான் முன்மொழிவதாக அவர் தெரிவித்தார்.

யக்கல பகுதியில் அமைந்துள்ள முன்னிலை சோசலிசக் கட்சியின் அலுவலகம் மீதான தாக்குதல் தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டும் விசாரணைகள் நடத்தப்படவில்லை எனச் சுட்டிக்காட்டிய அவர், குறைந்தபட்சம் இந்தப் பாடப்புத்தக விவகாரம் தொடர்பிலாவது ஏற்றுக்கொள்ளக்கூடிய சுதந்திரமான விசாரணையை எதிர்பார்ப்பதாக மேலும் தெரிவித்தார்.

# சடலத்தை அடையாளம்காண உதவுமாறு பொலிஸ் கோரிக்கை





வடமராட்சி – இன்பர்சிட்டி கடற்கரையில் கரையொதுங்கிய நிலையில் மீட்கப்பட்ட சடலத்தை அடையாளம் காண உதவுமாறு பொதுமக்களிடம் பருத்தித்துறை பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இன்பர்சிட்டி கடற்கரையில் அடையாளம் தெரியாத ஆண் ஒருவரின் சடலம் கடந்த 24 ஆம் திகதி காலை கரையொதுங்கிய நிலையில் பருத்தித்துறை பொலிஸாரினால் மீட்கப்பட்டிருந்தது.

இதையடுத்து பருத்தித்துறை திடீர் மரணவிசாரணை அதிகாரி திருமதி அன்ரலா வின்சன்தயான் சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்டார்.

45-50 வயது மதிக்கத்தக்க ஆணின் சடலம் ரீசேட்டும் அதன் பொக்கட்டில் பாம்பு அடையாளம் பொறிக்கப்பட்ட நிலையில் நீல நிற காற்சட்டையும் அணிந்த நிலையில் காணப்பட்டது.

பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ள இந்த சடலம் இதுவரை அடையாளம் காணப்படாத நிலையில், அதனை பார்வையிட்டு அடையாளம் காண உதவுமாறு பொதுமக்களிடம் பருத்தித்துறை பொலிஸர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# 2026இல் நாம் மாபெரும் வெற்றியை நோக்கி முன்செல்கிறோம் என்கிறார் முதல்வர் ஸ்டாலின்



“2026 இல் நாம் மாபெரும் வெற்றியை நோக்கி முன்செல்கிறோம். நாம் என்றால் தமிழ்நாட்டு மக்களாகிய அனைவரும் பெறப்போகும் வெற்றி.”

– இவ்வாறு ஆங்கிலப் புத்தாண்டை முன்னிட்டு முதல்வர் மு.க. ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

முதல்வர் மு.க. ஸ்டாலினின் 2026 ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“பல வகைகளிலும் தமிழ்நாட்டுக்கு வெற்றிகரமான ஆண்டாக அமைந்த 2025 இற்கு விடைகொடுத்து, இதுவரை காணாத மாபெரும் வெற்றியை வழங்கவுள்ள 2026 இல் அடியெடுத்து வைக்கத் தயாராகிறோம்.

தமிழ் வளர்ச்சிக்கும் தமிழர் எழுச்சிக்கும் தமிழ்நாட்டின் முன்னேற்றத்துக்கும் மிகச் சிறந்த ஆண்டாக 2025 அமைந்தது என்றால் மிகையாகாது. பொருளாதார வளர்ச்சியிலும் – புளுனீ வளர்ச்சியிலும் முதலிடம் என நமக்குக் கிடைத்துள்ள அங்கீகாரங்கள் 2030 இற்குள் ஒரு ட்ரில்லியன் டொலர் பொருளாதாரம் எனும் நம் கனவுக்கு வலுவூட்டுகிறது.

மகளிர், உழவர், மாணவர், மாற்றுத்திறனாளிகள், மீனவர், வணிகர், நெசவாளர், விளிம்புநிலை மக்கள், தொழில்முனைவோர், விளையாட்டு வீரர்கள் என அனைத்துத் தரப்பினரின் மனங்களையும் மகிழ்விக்கும் திட்டங்கள் நிறைந்த ஆண்டாக 2025 அமைந்தது. வீடற்ற மக்களுக்கு வீடுகளை வழங்கும் கலைஞர் கனவு இல்லம் திட்டமும், இதுவரை இல்லாத அளவுக்குப் பட்டாக்களை வழங்கி நிலம் எனும் அதிகாரத்தை எளியோருக்கு வழங்கியதும் நமது திராவிட மாடல் அரசில் முன்னுரிமை யாருக்கு என்பதற்குச் சான்றாக அமைந்தன.

உங்களுடன் ஸ்டாலின் முகாம்களால் மக்களின் தேவைகள் உடனடியாகத் தீர்க்கப்பட்டு வருகின்றன, நலம் காக்கும் ஸ்டாலின் முகாம்களால் உயர்தரச் சிறப்பு மருத்துவச் சேவைகள் மக்களுக்குக் கிடைத்து வருகின்றன. கல்வியில் சிறந்த தமிழ்நாடு, வெல்லும் தமிழ்ப் பெண்கள் என 2025-இல் தலைநிமிர்ந்துள்ளோம். காலை உணவுத் திட்டமும், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டமும் பெருமளவில் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. அனைத்து மாவட்டங்களுக்கும் பரவலான, சமத்துவமான வளர்ச்சியும் சாத்தியமாகி வருகிறது.

நாம் இதுவரை பெற்ற வெற்றிகள் தந்த ஊக்கத்தோடும், போராட்டங்களால் பெற்ற துணிவோடும் 2026 இல் மாபெரும் வெற்றியை நோக்கி முன்செல்கிறோம். நாம் என்றால் தமிழ்நாட்டு மக்களாகிய நீங்கள் அனைவரும் பெறப்போகும் வெற்றியைத்தான் குறிப்பிடுகிறேன். அமைதியும், நல்லிணக்கமும், மகிழ்ச்சியும், புதிய வெற்றிகளும் நிறைந்த ஏற்றமிகு ஆண்டாக 2026 அனைவருக்கும் அமைந்திட எனது புத்தாண்டு நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.

## கரூர் உயிரிழப்புச் சம்பவம்:

# த.வெ.க. நிர்வாகிகளிடம் சி.பி.ஐ. விசாரணை நிறைவு



டில்லி தலைமை அலுவலகத்தில் 3 நாள்களாக த.வெ.க. நிர்வாகிகளிடம் நடைபெற்று வந்த சி.பி.ஐ. விசாரணை நிறைவடைந்துள்ளது.

கரூர் உயிரிழப்பு சம்பவம் தொடர்பான விசாரணைக்காக த.வெ.க. பொதுச் செயலாளர் ஆனந்த், நிர்வாகிகள் ஆதவ் அர்ஜுனா, சிடிஆர்.நிர்மல்குமார், கரூர் மாவட்டச் செயலாளர் மதியழகன் ஆகியோர் டில்லியில் சி.பி.ஐ. அலுவலகத்தில் 29 ஆம் திகதி ஆஜராகினர். அவர்களிடம் தனித்தனியாக கரூர் சம்பவம் தொடர்பாக அடுக்கடுக்கான கேள்விகளை சி.பி.ஐ. அதிகாரிகள் எழுப்பினர்.

அவர்கள் அளித்த பதில்களை காணொலியாகவும் எழுத்துப்பூர்வமாகவும் பதிவுசெய்து கொண்டனர். அந்த வகையில், தொடர்ந்து 3 நாள்களாக நடைபெற்று வந்தவிசாரணை நேற்று நிறைவடைந்தது.

இதன் பின்னர் சி.டி.ஆர். நிர்மல் குமார் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“எங்கள் தரப்பில் அனைத்து விதமான விளக்கங்களையும் கொடுத்திருக்கிறோம். தேவைப்படும் பட்சத்தில், மேலும் விளக்கங்களைக் கேட்டாலும், எப்போது வேண்டுமானாலும் விசாரணைக்கு ஒத்துழைக்க தயாராக இருக்கிறோம் என்பதை கூறியிருக்கிறோம்.

உள்ளே நடந்த விசாரணை சம்பந்தமாக பொதுவெளியில் சொல்வது சரியாக இருக்காது. எங்கள் தரப்பில் என்னென்ன நியாயங்கள் இருக்கிறது, தமிழக அரசும் பொலிஸ்ம் எங்கு தவறு செய்தது என பல்வேறு விஷயங்களை தெரிவித்திருக்கிறோம்.

நிறைய காணொலி ஆதாரங்களையும் வழங்கியுள்ளோம் விஜய்க்கு சம்மன் அனுப்பவாய்ப்பு என்பது போன்ற தவறான தகவல்கள் பரப்பப்படுகின்றன. எல்லாவற்றையும் சட்டப்பூர்வமாக எதிர்கொள்வோம்.” என்று தெரிவித்துள்ளார்.



# ‘பருத்திவீரன்’ கிராமியப் பாடகி லட்சுமி அம்மாள் காலமானார்

பருத்திவீரன் படத்தில் “ஊரோரம் புளியமரம்” பாடல் பாடிய கிராமிய பாடகி லட்சுமி அம்மாள் நேற்று காலமானார்.

உடல்நலக் குறைவால் அவர் தனது 75 ஆவது வயதில் காலமானார்.

இவர் பருத்திவீரன் திரைப்படத்தில் நாட்டுப்புற பாடல்களை பாடியதோடு அந்த திரைப்படத்தில் நடித்ததன் மூலம் பட்டி தொட்டி எங்கும் புகழ் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# பொருளாதார நெருக்கடி காரணமாக ஈரானில் தீவிரமடைந்த போராட்டம்



பொருளாதார நெருக்கடி மற்றும் பணவீக்கம் காரணமாக, ஈரானில் நாடு தழுவிய அளவில் போராட்டங்கள் தீவிர மடைந்துள்ளன.

ஈரானிய ரியால் மதிப்பு வரலாறு காணாத வீழ்ச்சியைச் சந்தித்துள்ளமை யினால், அத்தியாவசியப் பொருள் களின் விலையும் உயர்வடைந்துள்ளன.

இதனால், ஈரான் தலைநகர் தெஹ்ரான் உள்ளிட்ட முக்கிய நகரங்களில் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் தீவிரமடைந்துள்ளன.

முன்னதாக, வர்த்தகர்கள் இடையே ஆரம்பமான குறித்தப் போராட்டம், தற்போது மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடையேயும் பரவியுள்ளது.

இந்த நிலையில், போராட்டக்காரர்களை கலைக்க பாதுகாப்புப் படையினர் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசி வருவதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.




# நிறைவுக்கு வரும் டென்மார்க் அஞ்சல் சேவை: 400 ஆண்டுகால பாரம்பரியத்திற்கு முற்றுப்புள்ளி

டிஜிட்டல் மயமாகிவிட்ட உலகில், பாரம்பரிய அஞ்சல் கடிதங்களின் தேவை மிகக் குறைந்ததைத் தொடர்ந்து, டென்மார்க்கின் அரசுக்குச் சொந்தமான அஞ்சல் நிறுவனமானீழளவழேசன, கடித விநியோக சேவையில் இருந்து முழுமையாக விலகத் தீர்மானித்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

2000ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் இருந்து டென்மார்க்கில் கடிதங்களின் பயன்பாடு 90 சதவீதத்திற்கும் மேல் குறைந்துவிட்டது.

கடிதங்களின் எண்ணிக்கை குறைந்ததால், நாடு முழுவதும் இந்த சேவையைத் தொடர்வது நிதி ரீதியாக நட்டத்தை (ஆண்டுக்கு சுமார் 57 மில்லியன் யூரோக்கள்) ஏற்படுத்துவதாக PostNord தெரிவித்துள்ளது.

டென்மார்க் உலகின் மிகவும் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட நாடுகளில் ஒன்றாகும். அரசு ஆவணங்கள், வங்கி விபரங்கள் மற்றும் மருத்துவத் தகவல்கள் அனைத்தும் ஏற்கனவே ஒன்லைன் மூலமே பரிமாறப்படுகின்றன.

இதனால் டென்மார்க் முழுவதும் உள்ள சுமார் 1,500 புகழ்பெற்ற சிவப்பு நிற அஞ்சல் பெட்டிகள் அகற்றப்படவுள்ளன. இதில் சில பெட்டிகள் ஏற்கனவே பொதுமக்களுக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

கடிதங்களுக்குப் பதிலாக, ஒன்லைன் வர்த்தகம் காரணமாக அதிகரித்து வரும் பொதிகள் விநியோகத்தில் மட்டும் இனி PostNord கவனம் செலுத்தும்.

இன்று முதல், அத்தியாவசிய கடிதங்களை அனுப்ப விரும்பும் மக்கள் Dao போன்ற தனியார் நிறுவனங்களின் சேவையைப் பயன்படுத்த வேண்டியிருக்கும்.

இந்த மாற்றம் பெரும்பாலான மக்களுக்குப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தாது என்றாலும், இணையத்தைப் பயன்படுத்தத் தெரியாத முதியவர்கள் மற்றும் தொலைதூரப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதிக்கப்படக்கூடும் எனக் அஞ்சப்படுகிறது. அவர்களுக்காக மாற்று வழிகளை உருவாக்க அரசு திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள்- 01.01.2026




ஒழுக்கமான வாழ்வு உங்களுக்கு வெற்றியை பெற்றுத் தரும். உங்கள் தன்னம்பிக்கை நிலை உயர்ந்து காணப்படும். நல்ல உறுதி காணப் படும்.

உங்கள் கடின உழைப்பிற்கு பதவி உயர்வு கிடைக்கும். முறையாக திட்டமிடுவதன் மூலம் வெற்றி கிட்டும். உங்கள் தொழிலில் சுறுசுறுப்பு காணப்படும்.

உங்கள் துணையுடனான அணுகுமுறையில் நேர்மை காணப்படும். இதன் மூலம் ஆரோக்கியமான உறவு காணப்படும்.

இன்று சுதந்திரமான நிதிநிலைமை காணப்படும். சேமிப்பும் உயரும். பயனுள்ள புதிய முதலீட்டுக்கு உகந்த நேரம்.இன்று உங்கள் ஆற்றலும் உறுதியும் அதிகரித்து காணப்படும்.




இன்று வேடிக்கையும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும் நாள். மொத்தத்தில் இன்று மகிழ்ச்சி காணப்படும்.

நீங்கள் உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். தன்னம்பிக் கையுடன் செயல்படுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் சமநிலை அணுகுமுறை பராமரிப்பீர்கள். உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாகவும் உங்களுக்கு சாதகமாகவும் காணப்படும்.நீங்கள் சிறிது பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று நேர்மறையான ஆற்றல் உங்களிடம் காணப்படும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று விழிப்புணர்வை பராமரிக்க வேண்டிய நாள். உங்கள் வீட்டில் சுப நிகழ்சிகள் ஏதாவது இன்று திட்டமிட்டி ருந்தால் அதனை வேறு நாளைக்கு தள்ளிப் போடுவது சிறந்தது.

பணியைப் பொறுத்தவரை இன்று மும்மரமான நாள். சிறந்த செயல்திறனுக்கு நீங்கள் கூடுதல் முயற்சிகள் எடுக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது. உறவு சுமூகமாக இருப்பது உங்கள் கையில் தான் உள்ளது.

நிதி வளர்ச்சி ஸ்திரமாக இருக்காது. நீங்கள் பணம் வீணாகாமல் தடுக்க சாதுர்யமாக செலவு செய்ய வேண்டும்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினை காணப்படும்.




இன்றைய விளைவுகளை எண்ணி வருத்தப்படுவதை விட அமைதியாக இருப்பது சிறந்தது.அதிர்ஷ்டமற்ற நிலையை சமாளிக்க நீங்கள் நம்பிக் கையுடன் இருப்பது சிறந்தது.

பணி சம்பந்தமான பயணம் மகிழ்ச் சிகரமாக இருக்காது. பயணத்தின் போது தேவையற்ற பதட்டம் காணப்படும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக நீங்கள் உணர்சிவசப்படுவீர்கள். இதனால் உங்கள் துணை யுடனான உறவு பாதிக்கும். இதனை எளிதாக எடுத்துக் கொண்டு அமைதியாக இருக்க வேண்டும்.

இன்று பண இழப்பிற்கான சாத்திய உள்ளது. எனவே பணத்தைக் கையாளும்போது கூடுதல் கவனம் தேவை.

இன்று ஆரோக்கியமாய் இருக்க நம்பிக்கையை மீட்டெடுக்க வேண்டும். கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது..




இன்று நேர்மறையான ஒத்துப் போகும் மனநிலை காணப்படும். ஆன்மீக ஈடுபாடு மகிழ்ச்சியை அளிக்கும்.

பணியிடச் சூழலில் பலன்கள் கலந்து காணப்படும். நீங்கள் திறம் பட செயலாற்ற கவனமுடன் பணியாற்ற வேண்டும்.

உங்கள் இருவரிடையே மகிழ்ச்சியை பராமரிக்க நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பண வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். அதற்கேற்றபடி திட்டமிட்டு பணத்தை பயன்படுத்தவும்.

இன்று முதுகுவலி ஏற்பட வாய்ப்புள்ளது. பதற்றத்தைக் குறைத்து ஆரோக்கியத்தை பராமரியுங்கள்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமான நாள். கடினமான பணி களைக் கூட இன்று நீங்கள் எளிதாக முடிப்பீர்கள்.

நீங்கள் திருப்தியான நிலையை உணர்வீர்கள். உங்கள் திறமையை உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவார்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியும் நல்லுறவும் காணப்படும். உங்கள் துணையைப் பற்றி நேர்மறையான அன்பான எண்ணம் கொண்டிருப்பீர்கள்.

நிதிநிலைமையில் முன்னேற்றம் காணப்படும். இன்று சீரான நிதி நிலைமை காணப்படும்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். இன்று ஒழுக்கமான போக்கும் மன உறுதியும் காணப்படும்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள். உங்கள் முயற்சி மூலம் வெற்றி காண்பீர்கள்.

பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும். சாதகமான பலன்களை அளிக்கும். நீங்கள் திருப்தியை உணர்வீர்கள்.

நீங்கள் சகஜமாக இருக்க வேண்டும். அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இந்த நேர்மறை போக்கின் காரணமாக உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

நிதி வளர்ச்சி இன்று சிறப்பாக இருக்கும். எதிர்பாராத பண வரவு காணப்படும்.

உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்கள் உறுதியும் உற்சாகமும் உங்களை ஆரோக் கியமாக வைத்திருக்கும்.




இன்று மகிழ்ச்சியளிக்கு வகை யில் எந்த நிகழ்வும் காணப்படாது. அமைதியாக இருப்பதும் ஆன்மீக ஈடுபாடும் சிறந்தது.

பணியிடத்தில் முன்னேற்றம் குறைந்து காணப்படும். பணிச்சுமை அதிகமாக இருக்கும்.

உங்கள் துணையுடன் பேசும்போது கட்டுப்பாடு இழப்பீர்கள். இதனால் விவாதம் ஏற்படும். இது இருவரிடையே காணப்படும் அன்பை பாதிக்கும்.

நிதி வளர்ச்சி பொறுத்தவரை இன்று சிறப்பான நாளாக இருக்காது. எதிர்கால தேவைக்காக ஒவ்வொரு பணமும் சேமிப்பது சிறந்தது.

கண்களில் சில பிரச்சினைகள் ஏற்படலாம். மருத்துவ பரிசோதனை மேற்கொள்வது சிறந்தது.

# இன்றைய ராசி பலன்கள்- 01.01.2026




இன்றைய நாளை நன்கு செலுத்த நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும். நேர்மறை எண்ணங்களை வளர்க்க வேண்டும்.

நீங்கள் பணிகளை திறமையாக ஆற்ற சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். கொள்கைகளை பின்பற்றுவதன் மூலம் நன்மை பெறலாம்.

நீங்கள் சிறிய விஷயங்களையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். உங்கள் துணையுடன் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்வது சிறந்தது.

நிதி நிலைமை இன்று சுமூகமாக இருக்காது. உங்கள் குடும்பத்திற்காக பணம் செலவு செய்வீர்கள்.

மகிழ்ச்சியாக இருப்பதன் மூலம் ஆரோக்கியமாக இருக்கலாம். என்றாலும் பாதுகாப்பின்மை உணர்வு உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும்.




இன்று நல்ல மாற்றங்கள் ஏற்படும். வருகின்ற வாய்ப்புகளை முறையாக பயன்படுத்துவதன் மூலம் நீங்கள் பல நன்மைகளைப் பெறலாம்.

பணி மாற்றம் மற்றும் பணி சம் பந்தமான பயணம் நேரலாம். உங்கள் முயற்சிக்கு பாராட்டு கிடைக்கலாம்.

உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் துணையை மகிழ்ச்சியுறச் செய்வீர்கள். உங்களின் உரையாடும் விதம் காரணமாக நல்ல சூழல் உருவாகும்.

நிதிநிலைமையைப் பொறுத்தவரை பலன்கள் கலந்து காணப்படும். வரவு செலவு இரண்டும் கலந்து காணப்படும். உங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது. இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். நீங்கள் அமைதியான சூழ்நிலை காணப்படும். அனுசரணையான மனநிலை காணப்படும்.

பணியிடச் சூழல் திருப்தியை அளிக்கும். நீங்கள் குறைவான முயற்சியில் வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் அணுகுமுறையில் அர்ப்பணிப்பு காணப்படும். இந்தப் போக்கின் காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

உங்கள் குடும்பத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். இதனால் சேமிப்பது கடினமாக இருக்கும்.

கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. உடற்பயிற்சி மூலம் ஆரோக்கியத்தை சிறப்பாக பராமரிக்கலாம்.




எந்த விஷயத்தையும் சகஜமாக எடுத்துக் கொள்ள வேண்டும். இன்று பொறுமையுடனும் அமைதியுடனும் இருக்க வேண்டும்.

பணியிடச் சூழலில் முன்னேற்றம் அவசியம். உங்கள் பணிகளை திறம்பட ஆற்ற உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் நீங்கள் அதிக சொந்தம் கொண்டாடுவீர்கள். இது உறவின் மகிழ்ச்சியை பாதிக்கும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. எனவே எதிர்காலத்திற்காக சேமிக்க வேண்டும்.

தொண்டை வலி ஏற்பட வாய்ப்புள்ளது. குளிர்ச்சியான உணவுகளை தவிர்ப்பது நல்லது. காய்ச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது.

# கொழும்பு மாநகர சபையில் ஆளும் தரப்புக்கு ஆதரவளித்த மு.கா. உறுப்பினர் இடைநிறுத்தம்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் சோஹாரா புகாரி நேற்று வரவு – செலவு திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்த காரணத்தினால் கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார். அவர் மீது ஒழுக்காற்று விசாரணை நடத்தப்படு மென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் அறிக்கையொன்றில் கூறியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

எதிர்க்கட்சியின் ஒரு பகுதியாக, மேற்படி முன்மொழிவை எதிர்க்கும் கட்சியின் தெளிவான முடிவு இருந்தபோதிலும், கொழும்பு மாநகர சபையின் வரவு – செலவுத் திட்ட முன்மொழிவுக்கு ஆதரவாக நீங்கள் வாக்களித்தீர்கள் என எனக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது, மேலும் ஊடகங்களிலும் செய்தி வெளியாகியுள்ளது.

வரவு – செலவுத் திட்டத்தை எதிர்க்கும் முடிவை கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்களால் நீங்கள் கலந்து கொண்ட குழுக் கூட்டத்தில் தனிப்பட்ட முறையில்



தெரிவிக்கப்பட்டது என்பதை குறிப்பாகக் கவனத்தில் கொள்ள வேண்டும். அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு கட்சியின் நிலைப்பாட்டை முழுமையாக அறிந்திருந்தும், கட்சித் தலைமையின் வெளிப்படையான அறிவுறுத்தல்களுக்கு நேர் எதிரான வகையில் நீங்கள் செயல்பட்டுள்ளீர்கள்.

உங்கள் நடத்தை கட்சி ஒழுக்கத்தை கடுமையாக மீறுவதாகும். மேலும் இது மிகுந்த கவலையுடன் பார்க்கப்படுகிறது.

இந்தச் சூழ்நிலையில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்களால், உங்கள் கட்சி உறுப்பினர் பதவி உடனடியாக இடைநிறுத்தப்படுகிறது என்பதை உங்களுக்குத் தெரிவிக்குமாறு எனக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், உங்கள் கட்சி உறுப்பினர் பதவி நீக்கம் உட்பட, உங்கள் மீது ஏன் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான காரணங்களைக் குறிப்பிட்டு, ஒரு பிரமாணப் பத்திரம் மூலம் உங்கள் விளக்கத்தை சமர்ப்பிக்குமாறு உங்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. இந்தக் கடிதம் பெறப்பட்ட நாளிலிருந்து ஒரு வாரத்திற்குள் அத்தகைய பிரமாணப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் இணங்கத் தவறினால், மேலும் அறிவிப்பு இல்லாமல் மேலும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும். – அந்த அறிக்கையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் எம்.பி. தெரிவித்துள்ளார்.